அவள்

(நாவல்)

விஜயேந்திரன்

அவள்

(நாவல்)

கவிஞர் விஜயேந்திரன்

விஜயா பிரசுரம்

மல்லாகம்

விலை 1-25.

முதற்பதிப்பு செப்டம்பர் 1968

காணிக்கை

தன்னலங்கருதாத் தன்மைமிகு
நண்பன் இ. மகேந்திரனுக்கு

அச்சுப் பதிவு :

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்,
யாழ்ப்பாணம்.

பதிப்புரை

பழங்காலத்தில் காவியம் வகித்த இடத்தை இக் காலத்தில் நாவல் வகிக்கின்றது. நாவல் எழுதுவதென் பது சிலர் நினைப்பது போல் அவ்வளவு இலகுவான காரியமல்ல. ஒரு சிறந்த நாவலை உருவாக்கவேண்டு மானால் ஆழ்ந்த வாழ்க்கை அனுபவம் வேண்டும். சம்ப வங்களை அழகாகப் பின்னிச் செல்கின்ற ஆற்றல் வேண் டும். இத்தனைக்கும் மேலாக அந்நாவல் படிப்பவரின் சலிப்பைச் சம்பாதித்துக் கொள்ளாமல் விறுவிறுப்பாக அமைவு பெற்றிருக்கவேண்டும்.

இதோ அன்பர் விஜயேந்திரனின் முதல் நாவலாகிய 'அவளை' உங்கள் முன் வைக்கின்றேம். நிச்சயமாக "அவள்" உங்களை ஏமாற்றமாட்டாள்!

இ. மகேந்திரன்
(நிர்வாகி, விஜயா பிரசுரம்)

E.I.C.97

முன்னுரை

காலதேச வர்த்தமானத்திற்கமைய உருவான இலக்கிய வடிவங்கள் பல. அவற்றுள் ஒன்றாக மிளிர்வது நாவல் இலக்கியம்..... இத்துறையில் முயற்சிப்பவர் ஈழத்தில் குறைவாகவேயுள்ளனர்.

தனி மனிதனையோ - சமுதாயத்தையோ, படம் பிடித்து, நம்மை நாமே அறிவதற்கு வாய்ப்பூட்டும் நாவல்கள் நிச்சயம் பெருக வேண்டும்.

திரு. விஜயேந்திரன் இத்துறையில் புதிதாக வந்துள்ள துடிப்பான இளைஞர். பல நாவல்களை படித்துள்ள அனுபவ வீரிவால் தனது சமுதாயத்தைச் சொந்தக் கற்பனை கொண்டு ''அவள்'' என்றுகாட்ட முற்பட்டுள்ளார். இந்த அவளில் நான் எனது சமுதாயத்தைக் கண்டேனென்றே! இதுவே நாவலின் சிகரமென்றே கூறவரவில்லை. நல்ல நடையில், அனுபவத்தோடொட்டிய உணர்ச்சியைப் பெய்து வடித்திருக்கின்றார் என்பதை வாசகர்கள் படித்தால் உணர முடியும். சொற்செட்டான வசனங்கள்மூலம் மைதிலி என்ற பெண்ணை நமக்குக் காட்டியுள்ளதோடு அவளது வாழ்வின் பக்க வேர்களாக வேறுசில பாத்திரங்களையும் உருவாக்கியுள்ளார்.

யாழ்ப்பாணம்
1-10-68.

இ. நாகராஜன்

SITHY VINAYAGAR
EARLALAI WEST
MALLAKAM

என்னுரை

'அவளை' நான் ஐந்து ஆண்டுகளுக்கு முன் உருவாக்கினேன். இது எனது முதலாவது நாவல். இதன்பின் இருபத்துக்கு மேற்பட்ட நாவல்களை எழுதி விட்டேன்.

நாவல் எழுதுவது எனக்கு மகிழ்வைத் தருகிறது: ஆத்மாவின் அபிலாஷைகளை எல்லாம் கவிதையைவிட நாவலிற்றான் நன்கு பிரதிபலிக்க முடியுமென கருதுகின்றேன்.

இந்நாவல், மனித ஜாதிக்கு மகத்தான வழிகாட்டும் அற்புத சிருஷ்டி அல்ல. அதே வேளையில் நாட்டைக் குட்டிச் சுவராக்கும் புற்றீசற் படைப்புக்களின் பிரதிநிதியுமல்ல. இந்நாவலை வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் எழுதினேன். இன்றைய எனது நிலையில் ஈழத்து இலக்கியச் சந்தையில் ''காய்கறி'' விற்பனையாளரும், ''மாமிச'' விற்பனையாளரும் நாவல் துறைக்குச் செய்யத் தவறியதை என்னால் ''ஓரளவு'' செய்ய இயலும் என நம்புகிறேன். அதற்கு காலத்தின் துணையும், பொருளின் ஆதாரமும் வேண்டும்.

நிற்க; இந்நாவலுக்கு முன்னுரை தந்த கவிஞர் இ. நாகராஜன் அவர்களுக்கும் நூல் நன்முறையிலமைய ஒத்துழைத்த பிற அன்பர்களுக்கும் என் நன்றி.

விவேகானந்தா டியூட்டரி,
மல்லாகம்.

"விஜயேந்திரன்"
(இ. இராஜேஸ்வரன்)

உள்ளே ....

		பக்கம்
1.	பிரிவு	5
2.	அவள்	8
3.	கடிதங்கள்	12
4.	காதற் புருக்கள்	15
5.	எண்ணத்தில் வீழ்ந்த இடி ...	17
6.	சுந்தரம்	20
7.	உலகம் இருண்டது	23
8.	ஆறுதல்	29
9.	தம்பி	32
10.	சோதனை	36
11.	அம்மா	41
12.	விசாரணை	43
13.	விடிவு	46
14.	புயல் ஓய்ந்தது.	50

பிரிவு

டாண்! டாண்! என்று நான்கு தடவை ஒலித்த கடிகாரத்தின் ஓசை படுக்கையிலே ஆனந்தமயமான நித்திரை செய்துகொண்டிருந்த மைதிலியின் நித்திரையைக் கலைத்தது. கண்களைக் கசக்கியபடியே எழும்பிய மைதிலி வழக்கம்போல் "முருகா" என்று மனத்துக்குள் தன் இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டாள். பின், அவசர அவசரமாக எழுந்து தன்னருகிலே உலகை மறந்த நிலையில் உறங்கிக்கொண்டிருந்த ஆருயிர்க் கணவன் சுந்தரத்தைத் தட்டியெழுப்பினாள். விறைத்த கட்டையைப் போல கிடந்த கணவனை விழித்தெழும்படிச் செய்வது அவளுக்குச் சுலபமாகப்படவில்லை. "அத்தான், எழுந்திருங்கள்" என்று மைதிலி ஆரம்பத்து தடவையாகக் கூறும் பொழுதுதான் "உம்" என்ற அலுப்பொலி சுந்தரத்தின் வாயிலிருந்து வந்தது. "அத்தான் நேரமாகிறது, எழுந்திருங்கள். இப்பொழுது எழுந்தால்தான் கொழும்பு மெயிலைப் பிடிக்கலாம்." மனைவி மைதிலியின் குரல் அவனை எழும்பச் செய்தது. நெட்டு முறித்துக்கொண்டே எழுந்த அவன் தனது கைகளை மைதிலியின் மென் தோள்மேல் போட்டான். நாணுற்ற அவள், "அத்தான், கைகளை எடுங்கள். நீங்கள் என்னை இப்படிக் கொஞ்சிக்கொண்டிருந்தால் நான் எப்படி உங்களுக்கு ஆகாரம் தயார் பண்ணமுடியும்?" என்றாள். மனைவி மைதிலியின் அன்புக் கண்டிப்பு சுந்தரத்தைப் பணியவைத்தது. சமையலறையை நோக்கி மயிலாக நடந்து சென்ற மனைவியின் அழகை இரசித்துக்கொண்டே சுந்தரம் குளியலறையை நோக்கி ஓயிலாக நடந்தான்.

இரு வார விடுமுறைக்குப் பின் இராணுவ முகாமுக்குத் திரும்பும் கணவனைக் கவலையோடு நோக்கிய மைதிலியால் பதில் பேசமுடியவில்லை. அந்தப் பேதை உள்ளம் பதைபதைத்தது. தன் அன்பனைப் பிரியப்

போகிறேமே! என்ற நினைப்பு அவளது தொண்டையை அடைத்தது. அவளின் கண்கள் நீரோட்டமாயின. ஆதரவோடு தன் மனைவியை அணைத்த சுந்தரம், "என்ன மைதிலி? சிறுபிள்ளை மாதிரி அழுகிறாய். உம்..... நான் என்ன மீண்டும் வரவே மாட்டேனு? ஆறு மாதத்தில் திரும்பிவிடுவேன். இதற்குப் போய் இப்படி அழுகிறாயே! அசடு" சுந்தரத்தின் பேச்சு மைதிலியின் துயரத்தை மேலும் பெருக்கிவிட்டது. பொதுவாகத் துயருற்ற ஒரு நெஞ்சுடன் பேச்சுக் கொடுத்தால் அந்நெஞ்சின் துயரம் கூடுவது இயற்கையல்லவா? இதுபோலவே மைதிலியின் துயரும் முன்னிலும் பெருகியது. "அன்பே, உங்களைப் பிரிந்து ஆறுமாத காலமும் எப்படியிருப் பேன்?" என்றபடியே சுந்தரத்தின் நெஞ்சில் முகம் புதைத்து விம்மினாள் மைதிலி. ஆதரவோடு அவள் கண் ணீர்த் துளிகளைத் துடைத்த அவன், "மைதிலி, நான் உன்னை விட்டு ஆறுமாத காலம் பிரிந்திருந்தாலும் நான் எழுதும் கடிதங்கள் வாராவாரம் உன்னுடன் பேசிக் கொண்டேயிருக்கும். மேலும் உனக்குத் துணையாக உன் தாயும் தம்பி ரவியும் இருக்கிறார்கள். இந்த நிலையில் நீ அழுவது நியாயமா?" சுந்தரத்தின் தேறுதல் மொழி களைக் கேட்ட மைதிலியின் நெஞ்சம் சற்று ஆறுதலடைந் தது. பெருமழையின் பின்பு சொட்டுச் சொட்டாக விழு கின்ற துமியைப் போல வேகம் குறைந்த மைதிலி, "அத்தான், நீங்கள் சந்தோஷமாகப் போய்வாருங்கள்" என்றாள். மைதிலியின் முகம் இப்பொழுது பூரண சாந்தி யுடன் காணப்பட்டது. இதைக் கண்டு ஆச்சரியப்பட்டுக் கொண்டான் சுந்தரம். சற்று முன்னால் கவலை மிகுந்து காணப்பட்ட மைதிலி களிப்போடு காணப்பட்டாள். இதிற் புதுமையொன்றும் இல்லையே! பெண்ணுள்ளம் ஒரு பலூன் போன்றது. ஒருமுறை துன்பத்தால் விரியும்; உடனேயே தணிந்துவிடும். இது மைதிலிக்கு மட்டும் எப்படி விதிவிலக்காக இருக்கமுடியும்?

வீட்டுக்கு வெளியே நின்ற வாடகை வண்டியில் காலை ஊன்றிய சுந்தரம் மெதுவாக மனைவிக்கு மட்டும் கேட்கும் குரலில், "மைதிலி, உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். கஷ்டமான வேலையொன்றும் செய்யாதே. மறு முறை இங்கு நான் வரும்போது என்னை வரவேற்க வேறெரு ஜீவனும் இருக்கும் இல்லையா?" என்றான். சுந் தரம் கடைசியாகச் சொன்ன சொற்கள் மைதிலியை நாணு றச் செய்தது. "போங்கள், உங்களுக்குச் சமய சந்தர்ப் பமே தெரியாது." மனைவி சொன்னதைக் கேட்ட சுந்தரம், "நான் போகட்டுமா?" என்றான். திடுக்குற்ற மைதிலி, "போய்வாருங்கள். வாரா வாரம் உங்கள் கடிதங்களுக் காகக் காத்துக் கொண்டிருப்பேன்." என்று சொல்லி அன்போடு தன் கணவனை வழியனுப்பினாள். அவளின் நெஞ்சம் வாடகை வண்டி சென்ற திக்கைப் பார்த்துத் தனக்குள் ஏங்கிக் கொண்டது.

"அவள்"

மைதிலி ஒரு சாதாரண பள்ளியாசிரியரின் மகள். அவள் தந்தை பாழும் குடிக்கடிமைப்பட்டவர். அவரது குடிப் பழக்கமே அவரது ஆயுளையும் குறுகிய காலத்திற்குள் முடித்துக்கொண்டது. தந்தையின் மறைவுக்குப் பிறகு மைதிலியும் அவளது சகோதரியும் தாயும் தம்பியும் அனுதை களானார்கள். ஆண் துணையில்லாத மைதிலியின் குடும்பத் தைக் கண்டு எள்ளி நகையாடியது ஊர். மைதிலி எங்கே யாவது வெளியே கிளம்பினால் அவளைப் பார்த்து பரிகசிப் பது 'கட்டாக்காலி' களின் பொழுதுபோக்காகிவிட்டது. மறைந்த தன் தந்தையின் பெயரில் வந்துகொண்டிருந்த சொற்ப சம்பளமே தஞ்சமென்றிருந்தது மைதிலியின் குடும்பம். இந்த இக்கட்டான நிலையிலேதான் தெய்வம் போல வந்தான் சுந்தரம். அவன் மைதிலியைச் சந்தித்த முதல் சந்திப்பிலேயே தன் உள்ளத்தை அவளுக்குப் பறி கொடுத்துவிட்டான். அவளது எளிமையும் அம்மங்கை யின் சுந்தரவதனத்திலே இழைந்தோடிய அசாதாரண சாந்தியும் சுந்தரத்தைப் பித்தனாக்கிவிட்டன. ஆரம்பத் தில் மைதிலி அவனோடு பழகியபோது எல்லா ஆண்களை யும் போலவே சுந்தரமும் இருப்பான் என்று நினைத்தாள். இருப்பினும் பழகப் பழகத்தான் ஆண் வர்க்கத்திற்கே சுந்தரம் ஓர் அணி விளக்கு என்பதை அவளாற் புரிந்து கொள்ள முடிந்தது. அவள் அவனைப் பூரணமாக விரும் பினாள். இரு மனம் கலந்தால் பிறகென்ன? சுந்தரம் — மைதிலி திருமணம் சிறப்பாக நடந்தது. சிறுவயதிலேயே தாயையும் தந்தையையும் இழந்த சுந்தரம் தன் மாமன் ஆதரவிலேயே வளர்ந்தான். அவர் அவனை பீ. ஏ. வரை யும் படிக்க வைத்தார். சுந்தரத்தை ஒரு முழு மனிதனாக்கித் தன் மகள் நிலாவழகியை அவனுக்கே மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று விரும்பியது மாமனது உள் ளம். ஆனால், சுந்தரம் மைதிலியை மணந்ததின் மூலம் மாமனரின் எண்ணத்திலே இடி விழுந்தது. சுந்தரத்துக்கு

அவர் ஜென்மப் பகைவனானார். மைதிலியின் பிரேமைக் காக உலகையே விலை பேசத் தயாராக இருந்தான் சுந் தரம். இருவரும் வாழ்க்கைப் பாதையிலே கைகோர்த்துச் சென்றார்கள். சுந்தரத்தின் பீ. ஏ. படிப்பும், அவனது கட்டுடலும் இராணுவத்திலே அவனுக்குத் தளபதி வேலையை வாங்கித் தந்தது. சுந்தரத்தினால் வறுமையில் வாடிய மைதிலியின் குடும்பம் பெருமைப்பட்டது. ஊரா லும் உலகாலும் பொருளில்லை என்ற காரணத்தினால் ஒடுக் கப்பட்ட மைதிலியின் குடும்பக் கௌரவம் உயர்ந்தது. சுந்தரத்தின் விருப்பத்தின் காரணமாக எச் எஸ். சீ. சித்தி யெய்திய மைதிலியின் தங்கை கலா பீ. ஏ. படிப்பதற்காகப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டாள்.

இப்பொழுது அவளுக்குக் கோடை விடுமுறை விட் டிருந்தார்கள். அவள் வந்தது சுந்தரத்தைப் பிரிந்து வாடிய மைதிலிக்கு எவ்வளவோ ஆதரவாக இருந்தது. ஓய்வு நேரங்களில் தங்கை கலாவுடன் பேசிக் களிப்பதில் மைதிலிக்குத் தனியான ஓர் ஆனந்தம் ஏற்பட்டது. கலா வின் கலகலப்பான பேச்சும் கபடற்ற மனமும் சுந்தரமில் லாத துயரத்தை ஓரளவுக்குக் குறைத்தது. சுந்தரம் விடை பெற்று ஐந்தாவது நாள். எவ்வளவுதான் பிற இன்பங்கள் கிட்டியபோதிலும் சுந்தரத்தைப் பிரிந்து கழித்த அந்த ஐந்து நாட்களும் ஜீவன் இல்லாத நாட்களாகவே தென் பட்டது மைதிலிக்கு. உலகத்தில் ஒரு பெண்ணுக்கு மாறாத இன்பத்தைக் கொடுப்பது கணவனின் அணைப்பும் அவனது அன்புந்தானே? சிந்தனை வயப்பட்டிருந்த மைதிலி தன் தங்கை கொண்டுவந்த அஞ்சலை ஆவலோடு பிரித்தாள். அது சுந்தரம் அவளுக்குத் தீட்டிய காதற் கடிதம். அவன் எழுதிய ஒவ்வொரு எழுத்துக்களும் வான் நட்சத்திரங்களாக மிளிர்ந்து, மைதிலிமேல் அவன் கொண்டிருந்த மையலை எடுத்துக் கூறுவதாக இருந்தது. அந்த அன்பு மடலை நீங்களுந்தான் படித்துப் பாருங் களேன்.

அன்புள்ள மைதிலி!

ஆழ்கடலின் முத்தாய் — அன்பின் விளக்கமாய் — பெண்மையின் இலக்கியமாய் விளங்கிடும் என் கற்கண்டே! உன்னைப் பிரிந்து நான் இங்கே வான் மழை காணும் பயிராய் — அனலிடைப் புழுவாய்த் துடிக்கின்றேன். வளர்ந்து நிற்கும் அழகு மலைகளை — மலையுச்சியிலே ஊற்றெடுக்கும் நீர் வீழ்ச்சிகளைப் — பாய்ந்து செல்லும் ஜீவ நதிகளையெல்லாம் நான் பார்க்கும்போது உன்னையே நினைக்கின்றேன். கண்ணே, எனது இதய தாகத்தை — விரக வேதனையை எப்படித்தான் எழுத்தில் வடிப்பேன்? பொழுதெல்லாம் உன்னருகிலே இருக்க வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். ஆனால், கடமை என்ற மூன்றெழுத்து என் ஆசைகட்கெல்லாம் தடைபோடுகிறதே! என் இதய வீணையிலே காதல் நாதம் மீட்டுகின்ற கவிஞ்ஞெவியமே! உன் உடம்பை நீ பத்திரமாகப் பார்த்துக்கொள். தாய்மையின் பொலிவிலே இருக்கும் உனக்குச் சிரமமான வேலைகள் ஆகாதல்லவா? மற்றும் எனது அன்பை உன் தாய்க்கும் ரவிக்கும் சொல்லு. கலாவும் விடுமுறைக்கு அங்கு வந்திருக்கின்றாள்தானே? மைதிலி, ஆறு மாதங்கள் பறந்தோடிவிட்டால் உன்னை அணைக்க நான் ஓடோடி வந்துவிடுவேன். இக் கடிதத்தை நான் எழுதும்போது நேரம் இரவு பத்து. கண்களைத் தூக்கம் ஈர்க்கின்றது. விடை கொடு, மறு மடலில் சந்திப்போம்.

என்றும் உன்,

சுந்தரம்.

ஆசைக் கணவனின் நேச மடலைக் கைகளிலே ஏந்தியபடியே கற்பனை வானிற் பறந்தாள் மைதிலி. அவளது சிந்தை அணு ஒவ்வொன்றும் இன்பத்தின் எல்லையைத் தொட்டன. வெகுநேரத்திற்குப் பின் தன் சிந்தனையிலிருந்து விடுபட்ட மைதிலி புதியதோர் உத்வேகம்

தன்னைப் பற்றியிழுக்கக் கணவனுக்குப் பதில் மடல் எழுத ஆரம்பித்தாள். ஒருவித இன்பத் தடுமாற்றத்தில் உழன்ற மைதிலி தன் அன்பையும் ஏக்கத்தையும் எழுத்தாக எழுதினாள் சுந்தரத்துக்கு. அதனைத் தபாலிற் சேர்க்கும்படி தம்பி ரவியிடங் கொடுத்த பிறகுதான் மைதிலிக்கு நிம்மதி ஏற்பட்டது.

கடிதங்கள்

ஒருமாத காலம் கடந்துவிட்டது. மைதிலியின் தங்கை கலாவின் விடுமுறை இன்றேடு முடிவடைகிறது. இன்று அவள் பேராதனைக்குப் புறப்படுகிறாள். தன் அன்புத் தங்கை பல்கலைக் கழகத்திற்குப் புறப்படுவதையிட்டு அவளுக்கென்று பிரத்தியேக பலகாரங்கள் தயார் செய்து கொடுத்தாள் மைதிலி. கவனமாகப் படிக்கும்படி தன் தங்கைக்குப் புத்தி கூறி அனுப்பி வைத்தாள். கலாவைப் பொறுத்தவரை அவள் மைதிலியின் நெஞ்சில் முழுமையாகக் கலந்திருந்தாள். ஆனால், ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் மைதிலி கலாவைக் கடிவாள். அதுதான் கலாவின் ஓழுங்கீனம். ஓழுங்கீனம் என்றால் நடத்தையில் என்று அர்த்தம் கொண்டு விடாதீர்கள். அவள் தங்கமானவள். ஆனால், தான் பாவிக்கும் எந்தப் பொருளையும் பக்குவமாய்ப் பேணுந் தன்மை அவளுக்குக் கைவராது.

அவள் பாவிக்கும் அறையே கலாவின் அசிரத்தைக்குத் தக்க எடுத்துக்காட்டாகும். இதுவே கலாவிடம் மைதிலிக்குப் பிடிக்காத அம்சம். தன் தங்கை சென்ற பின்பு அவளது அறையைச் சுத்தப்படுத்துவதே மைதிலிக்குப் பெரிய வேலையாக இருந்தது. சிதறிக் கிடந்த பத்திரிகைகளையும் நாவல்களையும் வரிசையாக அடுக்கி வைத்த மைதிலி "இந்தக் கலாவுக்கு இவ்வளவு வயதாகியும் பொறுப்புணர்ச்சி இல்லையே" என்று தன் தங்கையைக் கடிந்தபடி புத்தகங்களை அடுக்கி வைத்தாள் ஒரு புத்தகம் மைதிலியின் நெஞ்சைக் கவர்ந்தது. "கிரௌஞ்சவதம்' என்ற அந்த நாவலை அவள் கண்ணுற்றபோது அவள் எதிரே சுந்தரத்தின் முகம் தெரிந்தது. ஆம், தான் கல்யாணம் கட்டிய புதிதில் இதைப் போன்று எத்தனை எத்தனையோ புத்தகங்களை மைதிலிக்கு அவன் வாசித்துக் காட்டியிருக்கிறான். அப்படி இந்தப் புத்தகத்தையும் படித்துக் காட்டி மகிழ்வதற்குச் சுந்தரம் இல்லையே! என்றபோது மைதிலியின் நெஞ்சம்

கவலையால் நெகிழ்ந்தது. கையிலிருந்த நாவலின் பக்கங்களைப் புரட்டிய மைதிலி அந்த நாவலின் நடுவிலிருந்து கீழே விழுந்த கடிதத்தைக் கண்டாள். ஆச்சரியம் பொங்க அதைக் கைகளிலே எடுத்தாள். தன்னையறியாமல் அந்த மடலை ஊன்றிப் படித்தாள். அதனைப் படிக்கப் படிக்க வியப்பும் துயரும் மின்னலும் இடியும்போல மைதிலிக்கு ஏற்பட்டன. நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின. அந்தக் கடிதத்தை அவள் மட்டுமல்ல, நீங்களும் எதிர் பார்த்திருக்கமாட்டீர்கள்.

அன்பே கலா,

கண்ணும் இமையுமாகக் கலந்து பழகிய உன் காதலை இந்தக் கோடை விடுமுறை பிரித்துவிட்டது. கல்லூரி நாட்களிலே நீ என் அருகிலேயே இருந்தாய். இதனால் மாறுத இன்பம் கண்டேன். இன்றே தீராத சோகத்தில் ஆழ்ந்து கிடக்கிறேன். கண்ணே! ஏன்தான் விடுமுறை என்ற ஒன்றை விட்டு இளம் உள்ளங்களை விரகதாபம் அடைய வைக்கின்றார்களோ தெரிவில்லை. பிரேமவானின் பொன் நிலவே, என் காதல் இன்னமுதமே, நெஞ்சகத்தைத் தழுவி நிற்கும் குளிர்த் தென்றலே, நீ என் பக்கத்தேயில்லாத காரணத்தாலோ என்னவோ வெண்நிலா கூட என்னை வேதனை செய்கிறது. நட்சத்திரங்களெல்லாம் என்னைப் பார்த்து நகைப்பாகக் கண் சிமிட்டுகின்றன. கலா, உன் காந்த மேனியைத் தழுவிக் கொண்டேயிருக்க வேண்டும்போல் தோன்றுகிறது. உம்..... என்ன செய்வது கல்லூரி தொடங்கும்வரை பல்லைக் கடித்துக் கொண்டு இருக்க வேண்டியதுதானே. பிரம்மாவின் அற்புத சிருஷ்டியே! இம் மடல் கண்டவுடன் உன் மறுமடலை உடனே எழுதுக. இதோ உனக்கொரு முத்தம்.

ஆருயிர்,
ராஜன்.

ராஜன்! யார் இந்த ராஜன்? மைதிலியால் வியப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. தன் காதலைப் பற்றி உற்ற

சகோதரியான தன்னிடம் கூடக் கலா சொல்லாதது மிகுந்த ஆச்சரியத்தையும் வேதனையையும் கொடுத்தது. பொதுவாக எந்த விஷயமானலும் மைதிலியைக் கேட்டுவிட்டுத் தான் கலா செய்வாள். ஆனல், இந்தக் காதல் விஷயம்? ராஜன் என்பவன் யாரோ? எந்த ஊரோ? நல்லவனே கெட்டவனே? எதையுமே மைதிலியால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இந்த முறை கோடை விடுமுறைக்கு வந்தபோது கலா இடைக்கிடையே கடிதங்கள் எழுதியதும், தான் கேட்டபொழுது, தன் தோழிக்கு எழுதுவதாக அவள் மழுப்பியதும் மைதிலியின் நினைவுக்கு வந்தது. மைதிலியைப் பொறுத்தவரை அவள் தன் கணவனை சுந்தரத்தைத் தவிர ஆண் வர்க்கத்தையே எதிர்த்தாள். அந்த அளவிற்கு வெகுளி மனப்பான்மை மிக்கவள் அவள். இந்த நிலையில் தன் சகோதரி ஒருவனைக் காதலிப்பதாகத் தெரிந்ததும் மைதிலியின் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்! கலாவை எப்படித் திருத்துவது என்றே மைதிலிக்கு விளங்கவில்லை. அவளைப் பொறுத்த மட்டில் கலா ஒரு குற்றவாளியாகவே காணப்பட்டாள். வெகுநேரச் சிந்தனையின் பின் தன் அருமைத் தங்கைக்குப் பல புத்திமதிகள் கூறி, ஆடவர்களின் ஆசை வார்த்தைகளால் மோசம் போக வேண்டாம் என்று பணித்து, 'சுந்தரத்தைப் போல் எல்லாரும் நல்லவனுய் இருக்க முடியாது' என்று எடுத்துக் கூறி, நீண்ட ஒரு கடிதத்தை எழுதினுள் மைதிலி. அக் கடிதத்தைத் தபாலில் சேர்க்கச் சொன்ன பின்புதான் எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்த மைதிலியின் இதய வேகம் தணிந்தது.

காதற் புருக்கள்

செங்கதிரோன் மேற்கை நாடிக்கொண்டிருந்தான். மனேகரமான மாலைவேளை. வசந்தகாலத்துத் தென்றல் வீசிக்கொண்டிருந்தது. பேராதனைப் பல்கலைக் கழகத்தை அடுத்திருந்த தனிமையான பூங்காவிலே இரு காதற் புருக்கள் காதலின்பம் சுகித்துக்கொண்டிருந்தன. தன்னிலை மறந்திருந்த அவ்விரு புருக்களிலும் ஆண் புரு முதன் முதல் பேச்சை ஆரம்பித்தது. "கலா ஏன் மனவாட்டத்துடன் காணப்படுகிருய்; நான் காரணத்தை அறியலாமா?" ஆணின் குரலுக்கு மறுமொழியாகத் தன் கையிலிருந்த கடிதத்தைக் கொடுத்தாள் அப்பெண். அதாவது கலா. கடிதத்தைப் படித்த ஆணின் — ராஜனின் முகத்தில் இலேசான புன்னகை அரும்பியது. அதற்கு அர்த்தம் அறிந்துகொள்ள விரும்பிய கலா, "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்ருள். தொடர்ந்து சிரித்த ராஜன் "கலா, உன் அக்கா ஒரு வெகுளி. அவள் கருத்துப்படி பார்த்தால் ஆணினத்தையே உலகத்திலிருந்து அழித்தால்த்தான் அவள் சாந்தி காணுவாள் போல் இருக்கிறது. அன்புடன் ராஜன் தோளிற் கை வைத்த கலா, "ராஜன் உங்களை அக்கா ஒருமுறை நேரிற் பார்த்துவிட்டால் தன் சுந்தரத்தை விடத் தாங்கள்தான் நல்லவர் என்று முடிவு கட்டி விடுவாள்" என்ருள். ஆதரவோடு அவள் கரம் பற்றிய ராஜன் "கலா, யாருக்கு யார் நல்லவராய் இருந்தால் என்ன. உனக்கு நான் நல்லவனுய் இருந்தாற் சரிதானே" என்ருன். இதைக் கேட்ட கலா "ராஜன், எனக்குச் சகோதரியாய்க் கிடைத்த மைதிலியைப் போல் இந்த உலகத்தில் யாருக்குமே ஒரு சகோதரி கிடைக்க முடியாது. அவள் தன்னலமற்ற தெய்வம். எங்கள் குடும்பம் ஏழ்மையில் வாடிக்கொண்டிருந்தபோது எமக்குச் சாப்பாடுகூடச் சரிவரக் கிடையாத அத்தகைய நேரத்தில் தன் பங்கை எனக்கும் என் தாய்க்கும் தம்பிக்கும் தந்து விட்டுத் தான் மட்டும் பட்டினியாக இருப்பாள் மைதிலி.

என் சகோதரியின் மேம்பட்ட குணத்தினை நீங்கள் அவளோடு பழகினால்தான் புரிந்துகொள்ள முடியும்" என்று கூறித் தன் தமக்கையைப் புகழ்ந்தாள் கலா. இதைக் கேட்டு ஆச்சரியப்பட்ட ராஜன் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட சகோதரிகளா? என்று சொல்லிக்கொண்டே கலாவை அணைத்தான். தனிமை அவர்களுக்கு சுவர்க்கமாயிருந்தது. அத் தனிமையின் இனிமையில் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டார்கள். கலாவின் பொன்னை கன்னங்கள் புண்ணகும் வண்ணம் அவள் முகத்தில் முத்தமாரி பொழிந்தான் ராஜன். அவர்களிருந்த அச் சோலையிலே கூவிக் கொண்டிருந்த மாங்குயில் கூடக் காதலரின் கூடல் கண்டு ஜோடி இல்லாத் தன்னிலை நினைந்து பொருமைப்பட்டது. அந்தி நிலவு வானத்தில் தோன்றும் வரை இன்பத்தின் அணைப்பிலிருந்து பிரியாது பிறவிப் பயனைக் கண்டார்கள் கலாவும் ராஜனும். காதலைப் போன்று உள்ளத்திற்கும் உடலுக்கும் நினைவுகளுக்கும் ஆனந்தத்தை அள்ளி அளிக்கக் கூடிய அமிழ்தம் வேறென்னதான் இருக்க முடியும்?

எண்ணத்தில் வீழ்ந்த இடி

"அக்கா உனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன." தம்பி ரவி கொண்டு வந்த கடிதங்களை உற்று நோக்கினாள் மைதிலி. அதில் ஒன்று அவளது ஆருயிர் சுந்தரம் எழுதியது. அடுத்த கடிதம் அன்புத் தங்கை கலா எழுதியது. இரண்டு மடல்களிலும் எதை முதலிற் படிப்பது என்று தடுமாறிய மைதிலி, தன் கணவனின் கடிதத்தையே முதற்கண் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

என்னருமை மைதிலி,

இந்தக் கடிதம் உனக்கு வியப்பும் வேதனையும்தான் தரும். ஆயினும், தயவு செய்து முழுக்கப் படி. கண்ணே, கொங்கோ என்ற கறுப்பர் நாட்டில் சுதேச கலகக் காரர்களுக்கும், ஐ. நா. மன்ற அங்கத்துவ நாடுகளின் வீரர்களுக்கும் கடுமையாகச் சண்டை நடப்பது பற்றி உனக்கு நான் சொல்லியிருக்கின்றேனல்லவா? அந்தக் கொங்கோப் போரில் பங்குபற்றுவதற்கு ஐந்நூறு படை வீரர்களைத் தந்துதவும்படி ஐ நா. மன்றச் செயலாளர் இலங்கையைக் கேட்டிருக்கின்றார். இலங்கை அரசாங்கம் தன் நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காகப் படைகளை அனுப்புவதற்கு ஒப்புதல் தெரிவித்திருக்கின்றது. கொங்கோவிற்குப் படையையிட்டுச் செல்லும் மூன்று மேஜர்களில் என்னையும் ஒருவனாக அரசாங்கமும் இராணுவ மேலிடமும் தெரிந்துள்ளன. மறுக்கமுடியாத நிலையில் நான் வெளிநாடு போகிறேன். அன்பே மைதிலி, இதை எழுதும்போது என் நெஞ்சம் வேகுகின்றது. ஆனால், இதைப் படிக்கும்போது நீ எப்படி வருந்துவாய் என்பதையும் நான் அறிவேன். என்றபோதிலும் கடமையிலிருந்து என்னால் நழுவ முடியவில்லையே.

மைதிலி, அன்பே, பெரும்பாலும் ஒரு வருடத்தில் இலங்கை திரும்பி விடலாம் என்ற நம்பிக்கை எனக்

குண்டு. எதையுமே சரியாகச் சொல்ல முடியவில்லை. மேலும், உன் உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள். உனது தாயின் சுகம் இப்பொழுது எப்படியிருக்கிறது? உன் தங்கையைப் பற்றியும் எழுதியிருந்தாய். மைதிலி, அவளுக்குத் தக்க வயது வந்துவிட்டது யாரைப் பிடிக்கிறதோ அவனையே அவள் மணந்து கொள்வாள். படிக்கும் காலத்திற் காதலுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கவனமாகப் படிக்கச் சொல். உன் தம்பியையும் கவனமாகப் படிக்கச் சொல். நான் திரும்பும்வரை அவன்தானே உங்கள் குடும்பத் தலைவன். மேலும், மாதாமாதம் உன் பேருக்குப் பணமும் கடிதமும் அனுப்புவேன்.

வேறு எழுதுவதற்கொன்றுமில்லை. மறுமடலை நான் உனக்குப் பெரும்பாலும் வெளிநாட்டிலிருந்தே எழுத முடியுமெனக் கருதுகிறேன். என் அன்பே, மனதை அலையவிடாது தைரியமாக இரு. பிரிவுதான் பிரேமைக்குப் பொலிவூட்டுகிறது.

இவ்வண்ணம்,
அன்பின்,
சுந்தரம்.

கணவனின் கடிதம் மனைவியின் நெஞ்சிலே வேதனைப் புயலைக் கிளப்பியது. ஆறு மாதந்தான் கணவனைப் பிரிந்திருக்க வேண்டுமென்று நினைத்தாள். ஆனால், இனிமேல் எத்தனை மாதங்களோ, இன்றேல் வருடக் கணக்காகவோ தன் கணவனைப் பிரிந்திருக்க வேண்டும் என்பதை மைதிலியால் புரிந்துகொள்ள முடியாதிருந்தது. அவளால் சும்மா இருக்க முடியவில்லை. படுக்கையில் விழுந்து புலம்பினாள். அன்புக் கணவனின் பிரிவு நேச மனைவியின் நெஞ்சில் எத்தனை மடங்கு வேதனையைத் தோற்றுவிக்கும் என்பதற்கு மைதிலியின் நிலை தக்க உதாரணமாக அமைந்தது.

காலையிலிருந்து மாலை வரையும் மைதிலி இடையருது கண்ணீர் பெருக்கினாள். மரங்களை, வீடுகளை, செடி, கொடிகளை அழிக்கின்ற புயலுக்கும் ஓய்வுண்டு. ஆனால், அழுதழுது வடியும் மைதிலிக்கு மட்டும் ஓய்வே கிடைக்கவில்லை. பெண்களுக்கு எத்தனையோ ஆற்றலை ஆண்டவன் கொடுத்திருக்கின்றான். சாந்தம், அன்பு, எழில் இவற்றிற் கெல்லாம் உருவகமாகப் பெண்ணைப் படைத்த ஆண்டவன், பிரிவைத் தாங்கும் சக்தியை மட்டும் ஏனோ கொடுக்கவில்லை! அப்படி இந்த ஆற்றலைக் கொடுத்திருந்தால், காட்டாற்று வெள்ளம்போல் — பரவி வருந்தீயைப்போல் மைதிலியின் உள்ளத்திற் பொங்கிய தாபமும் தணிய வழி பிறந்திருக்கும் மைதிலிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆமாம், அரசாங்கத்தின்மீதுதான் அவளுக்கு ஆத்திரம். ஆயினும்; தன் கணவன் தாய் நாட்டிற்குப் பெருமை தேடித் தரப்போகிறான் என்று நினைத்து மைதிலியின் ஆத்மா சந்தோஷமடைந்தது.

சுந்தரம்

ஐ நா. மன்றத்தின் அழைப்பின் பேரில் கொங் கோவை நோக்கித் தம் பயணத்தை ஆரம்பித்த இரா ணுவ வீரர்கள் இன்ப வெள்ளத்தில் மிதந்தார்கள். தாய் நாட்டின் புகழை நிலைநாட்டுவோம் என்ற இன்ப நினை வினால் ஈர்க்கப்பட்டு வீரர்கள் ஆனந்தக் கடலில் மிதந் தார்கள். ஆனால், அத்தனை வீரர்களிலும் ஒருவனின் நெஞ்சில் மட்டும் சோகம் கப்பிக் கிடந்தது. கப்பல் இலங்கையை விட்டு விலக விலக அத் தளபதியின் துன் பம் அதிகரித்தது. அவன்தான் சுந்தரம். அவனுக்குத் தன் மனைவி மைதிலியை நினைக்கும்போது மனத்தாங்கல் கூடியது. இன்னும் ஐந்து மாதத்தில் தனக்குப் பிறக்கப் போகும் செல்வத்தைக் கொஞ்ச வழியில்லையே! என்று நெஞ்சம் மிக வருந்தினான் சுந்தரம். எவ்வளவுதான் மைதிலியின் நினைவை மறக்க முயன்றாலும் மறக்க முடிய வில்லை. மைதிலியின் மையிழிகள், பட்டுக் கன்னங்கள், முல்லைப் பற்கள் இவற்றையே நினைந்து நினைந்து உருகி னான். அப்பொதெல்லாம் அவன் மனம் இந்த மேஜர் வேலையை விட்டுவிட்டுத் தனது ஆசைக்குரிய மைதிலியை ஓடிச் சென்று தழுவலாமா என்று எண்ணும். ஆனால், மறுகணமே கடமை என்ற மூன்றெழுத்தும் அவனது மனோதத்திற்குத் திரையாக அமைந்துவிடும். இலங்கை யிலிருந்து புறப்பட்ட ஐந்நூறு வீரர்களுக்கும் தலைமையிட் டுச் சென்றவன் சுந்தரம். இரண்டாமவன் நாயகம். மூன்றுமவன் சில்வா. இந்த மூவரில் சுந்தரம் ஒருவன் தான் மதுவையும் மங்கையையும் வெறுப்பவன். மற்றைய தளபதிகள் மூச்சு விட மறந்தாலும் மது அருந்துவதையும் மங்கையரைத் தழுவுவதையும் மறக்கமாட்டார்கள். அவர்கள் எல்லாரும் பிரயாணம் செய்த 'மேரி கப்பலில்' பெண் களுக்குக் குறைவேயில்லை. அதுவும் அழகு சுந்தரிகள்! இந்த நிலையில் மேஜர்களான நாயகமும் சில்வாவும் மனம் பேதலித்ததில் ஆச்சரியம் இல்லையே.

சுந்தரம் மட்டும் பிற மகளிரைத் தழுவுவதற்கு மனம் ஒப்பாதவன். காரணம், அவன் உண்மையான மனித இதயம் மிக்கவன். அவனை எப்படியாவது மகிழ்விக்க வேண்டும் என விரும்பிய நாயகம் சுந்தரத்தைத் தன் அறையில் நுழையும்படி கூறிவிட்டு அகன்றான். நாயகம் அழைத்த காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாத சுந் தரம் அங்கே சென்றான். அவ்வறையிலே கண்ட காட்சி யால் அருவருப்புற்றான். காரணம், அவ்வறையிலே இருந்த கட்டிலில் ஒரு பருவக் கட்டழகி யிருந்தாள், சுந்த ரத்திற்குக் கண்களினூடே ஜாடை காட்டினாள் அவ்வழகி. அவ் அலங்கோலக் காட்சியைக் கண்ட சுந்தரம் காறி உமிழ்ந்துவிட்டுத் தன் அறைக்குப் போய்விட்டான். அவ னுக்கு மேஜர் நாயகத்தின்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவனுள்ளமோ "இகத்திலும் பரத்திலும் பிரிய சகி மைதிலியே என் கூடல் மகள்" என்று சொல்லிக் கொண்டிருந்தது. சுந்தரத்தைப் பொறுத்தவரை மைதிலி தெய்வ மகள். மைதிலியின் அன்பினிலே கிட்டும் சுகம் புனிதமானது. ஆண்களும் கற்பினைப் பேணவேண்டு மென்பது அவசியமானது என்ற கருத்தையுடையவனவன்.

கப்பற் கண்ணாடியூடாக ஆழியின் பொங்கியெழும் அலைக் கூட்டத்தை அவதானிக்கும்போது சுந்தரத்தின் நெஞ்சம் நிலையின்றித் தவித்தது. மைதிலியின் சுந்தர நினைவு அவன் இதயத்தை ஈர்த்தது. பாரதியின் 'நீலக் கடலலையே உன் நெஞ்சின் அலைகளடி" என்ற மோக னக் கவிதையின் உயிர்த்துவத்தைச் சுந்தரம் நினைத்துக் கொண்டான்.

தாய் நாட்டின் புகழை நாட்டப் போய்க்கொண்டிருக் கும் இராணுவப் படையினர் கொங்கோப் போரிலே உயிரை யும் கொடுக்கவேண்டி வரலாம் என்பதைச் சுந்தரம் அறி வான். அவன் அத்தகைய வீர மரணத்தை நிச்சயம் ஆவலோடு வரவேற்பான். பள்ளியிற் படிக்கின்ற காலத் திலே அவனது சரித்திர ஆசிரியர் நெப்போலியனைப் பற்றியும் அலெக்சாண்டரைப் பற்றியும் கரிபால்டியைப்

பற்றியும் கற்பிக்கின்ற நேரத்திலே, சுந்தரம் அவர்களைப் போல் தானும் ஆகக்கூடாதா? என்று நினைப்பான். சாவைச் சந்தோஷத்தோடு வரவேற்கத் தயங்காத சுந்தரத்திற்குத் தான் போரிலே இறந்துவிட்டால் மைதிலியின் நிலை சிறகிழந்த பட்சியின் நிலையாகிவிடுமே என்பதை நினைக்கும்போது, சாவு அவனைப் பிதியுறச் செய்வதாகத் தான் இருந்தது.

தாமெல்லாம் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கச் சுந்தரம் மட்டும் எதையோ பறி கொடுத்தவன் மாதிரி நீலக் கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது பிற இராணுவ வீரர்களுக்கு நகைப்பேற்படுத்தியது.

உலகம் இருண்டது

ஆறு மாதங்கள் மின்னல் போல் மறைந்தன. அந்த ஆறு மாதங்களும் மைதிலியின் வாழ்விற் பெரும் சோதனைக் காலம். அவளின் அன்புக் கணவன் கடமையைப் பெரிதென நினைந்து போர்முனை சென்றுவிட்டான். மைதிலியோ தூண்டிற் புழுவாய்த் துடித்தாள். உணவு செல்லாது, உறக்கங் கொள்ளாது மனதைத் தன் கணவனிடமே கொடுத்துவிட்ட மைதிலி நெஞ்சம் மிக வெந்தாள். இரவுகள் வந்தன, சென்றன. விண் மீன்கள் பூத்தன, மறைந்தன. கதிரவன் தோன்றினன், மறைந்தனன். நிலவு வந்தது, போனது. ஆனால், மைதிலியின் ஆசைக் கணவன் மட்டும் இன்னமும் வரவில்லை. கொங்கோப் பகுதியில் இடைவிடாது கடுஞ் சண்டை நடப்பதாகவும் அதிலே இதுவரை இலங்கையைச் சேர்ந்த பல இராணுவ வீரர்கள் இறந்துவிட்டதாயும் வானொலியின் வாயிலாகவும் செய்தித் தாள்கள் மூலமாகவும் செய்திகள் கிடைத்துக் கொண்டிருந்தன.

தினமும் மைதிலி "கடவுளே, என் கணவனை என்னிடம் பத்திரமாகத் திருப்பிச் சேர்த்துவிடு" என்று தன் குலதெய்வத்தை வேண்டிக்கொண்டாள். கணவனைப் பிரிந்த வேதனை ஒருபுறம் இருக்கத் தங்கை கலாவின் விஷயமும் மைதிலிக்குத் திருப்தியைத் தரவில்லை. கலா கல்லூரி காலத்திலேயே காதலுலகில் நுழைந்தது, மைதிலி விரும்பாத ஒன்றென்றாலும் கலாவோ தன் காதலைச் சிக்கெனப் பற்றியவளாகவேயிருந்தாள். இத்தோடு மட்டும் மைதிலியின் மனக் கஷ்டம் நீங்கவில்லை. ஊதாரியாகத் திரியும் தன் தம்பி, சாவைச் சந்திக்கத் தருணம் பார்த்திருக்கும் வயோதிபத் தாய். இவர்களெல்லாம் மைதிலிக்கு இன்னல் தருபவராகவே இருந்தார்கள். மைதிலி பெண்களுக்கெல்லாம் மணி விளக்குப் போன்றவள். அவளது இதயம் பிரேமையின் பொற்கோயில். கோடி துயரங்

கள் மைதிலியைக் கூடி நின்றாலும் அடிக்கொருதரம் சுந்தரம் கொங்கோவிலிருந்து தீட்டுகின்ற கடிதங்கள் ஓரளவுக்கு மனச் சாந்தியைத் தந்தது.

அன்று முதலாம் தேதி.

சுந்தரத்தின் மடலை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் மைதிலி. அஞ்சலாழியன் கையிலே தந்து சென்ற கடிதத்தை ஆவலோடு பிரித்தாள் அவள். அதைப் படிக்கப் படிக்க இன்பமும் துன்பமும் மைதிலிக்கு மாறி மாறி ஏற்பட்டது.

இராணுவ நிலையம்,
கொங்கோ.

என் உளியிலும் உயிரிலும் இரண்டறக் கலந்துவிட்ட மைதிலி.

இக் கடிதம் வெளிநாட்டிலிருந்து நான் உனக்கு எழுதும் ஐந்தாவது கடிதம். ஆறுவது கடிதம் எழுதுவேனோ என்னவோ! உயிரோடிருந்தால் நிச்சயமாக எழுதுவேன். அன்பே, அனுதினமும் இங்கு நடக்கும் கொடிய போரிலே பல வீரர்களின் உயிர்கள் பலியாகிக் கொண்டேயிருக்கின்றன. இதுவரை இலங்கை வீரர்களில் நானூற்றுக்கு மேற்பட்டோர் இறந்துவிட்டார்கள். எனது சகதளபதி சில்வாவும் அவர் தலைமையிலே சென்ற ஐம்பது வீரர்களும் நேற்றைய போரிலே இறந்துவிட்டார்கள். ஒருவேளை நானும் இறக்கவேண்டி வந்துவிட்டால்? இந்த வரிகளைப் படிக்கும்போது உனது நெஞ்சம் என்னமாய் வேதனையுறும் என்பது எனக்குத் தெரியும்.

ஆனால், ஒருவேளை உன் அன்புக்குரிய சுந்தரம் போரிலே இறந்துவிட்டாலும் என் ஆத்மா என்றென்றும் உன்னையே வட்டமிட்டுக் கொண்டிருக்கும். எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் உனை மறவேன். காதற் பைங்கிளியே, நீ படும் கஷ்டங்களையெல்லாம் என்னால் உணரமுடிகிறது. என்ன செய்வது? மைதிலி, துன்பமே இயற்கையெனும்

சொல்லை மறந்து விடுவோம். இன்பம் செய்யும் முருகனை நீ பிரார்த்திப்பாயாக. துன்பமெலாம் பறந்துவிடும். அன்பே, மேலும் உனக்கு நான் ஒன்று சொல்ல வேண்டும். இது பத்தாம் மாதம்தானே! ஏனடி என் இராஜாத்தி நகைக்கின்றாய். இத்தோடு மடலை முடிக்கின்றேன். கடவுள் விரும்பினால் நாம் மறுமடலிற் சந்திக்கலாம்.

என்றும் உன்,
சுந்தரம்.

மடலைத் தன் கண்களிலே ஒற்றிக்கொண்டாள் மைதிலி. அவளது வாய் தன்னை யறியாமல் "அவருக்கு ஓர் ஆபத்தும் வரக்கூடாது" என்று பிரார்த்தித்துக் கொண்டது. நெஞ்சமோ ஏக்கக் கடலாகியது. இரு தினங்கள் சென்றன.

ஒரு வெள்ளிக்கிழமை. அன்றுதான் கிருஷ்ண ஜெயந்தி. கோகுலபாலனென்றும் மோகனக் கண்ணனென்றும் அன்பர்களால் விரும்பிப் பூஜிக்கப்படுகின்ற கண்ணன் பிறந்த நாளிலே மைதிலிக்கும் தனி ஈடுபாடு இருந்தது. அதி காலையிலேயே படுக்கையை விட்டெழுந்த மைதிலி நீராடி, வீடு பெருக்கி, வாசலில் அழகிய கோலமிட்டு, கண்ணன் படத்திற்கு முல்லை மலர்களைச் சூட்டிவிட்டு, ஆண்டாளின் திவ்விய சிருஷ்டியான "திருப்பாவை"யைப் படிக்க ஆரம்பித்தாள். அதைப் படிக்கப் படிக்க மைதிலியின் துன்பங்கள் படிப்படியாகக் குறைந்தன.

அவள் மனக்கண் முன்னே புல்லாங்குழலேந்திய கண்ணன் முறுவலித்து வந்தான். கண்ணன் வேய்ங்குழல் இன்னிசை எழுப்புகின்றது. ஈடற்ற பகவத் பிரேமை வயப்பட்ட மைதிலி திடீரென்று இடுப்பைப் பிடித்துக் கொண்டாள். அவளது மேனி சிலிர்த்தது. இன்பமும் துன்பமும் செறிந்த ஓர் அசாதாரண அனுபவம் அவளுக்கு ஏற்பட்டது. அவளது உள்ளம் அவளிடம் "மைதிலி நீ தாயாகப் போகிறாய்" என்று சொல்லிக் கொண்டது.

தொட்டிலிற் படுத்துச் சிறுமலர் வாய் திறந்து சிரித்துக்கொண்டிருந்த மழலை அமிழ்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் மைதிலி. அவளுக்குச் செல்வம் பிறந்து இன்றோடு முப்பது நாட்கள் பூர்த்தியாகின்றது. தன் பெண் குழந்தை கிருஷ்ண ஜெயந்தியிற் பிறந்தபடியால் அதற்குக் 'கண்ணம்மா' என்று பெயர் வைத்தாள் மைதிலி. அத்தோடு பாரதிமேல் அவளுக்கிருந்த அளவற்ற பக்தியும் அப் பெயரைத் தன் குழந்தைக்கு வைக்க ஒரு காரணமாயிருந்தது. கோகிலத்தைப் போன்ற குரலினிமை கொண்ட மைதிலி தன் அமுத வாய் திறந்து பாரதியின் "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" என்ற பாட்டைப் பாடினாள். பாரதியின் பாட்டைப் பாடியபடியே தன் செல்வத்தைத் துயிலச் செய்தாள் அவள்.

பால் வடியும் முகத்துடன் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைக் காண்கையில் மைதிலியின் முகம் வாட்டமுற்றது. "பிறந்த செல்வம் இன்னும் தந்தை முகம் காணவில்லையே!" என்ற மைதிலியின் மெல்லிய குரலையும் முந்திக் கொண்டு இரு வெண் மல்லிகைகள் கண்ணினின்று விழுந்தன.

'டிரிங்' 'டிரிங்' என்று வாசலில் ஒலித்த மணியோசை மைதிலியை வாசலை நோக்கி, ஓட வைத்தது. அவளுக்குக் கலா ஒரு கடிதம் எழுதியிருந்தாள். வாரக் கடைசியிற் கலாவுக்கு விடுமுறை வருவதாகவும் அதனால் வீட்டுக்கு வருவதாகவும் கலா எழுதியிருப்பதாகவும் மைதிலி ஒரு கணத்தில் உணர்ந்து கொண்டாள். தன் தங்கை வருவதில் மைதிலிக்கு மகிழ்ச்சிதான். காரணம், பொழுது போகாமல் வாடிய மைதிலிக்குத் தங்கையின் கலகலப்பான பேச்சுப் புதிய காந்தியை அளிக்கும் என்று எதிர்பார்த்தாள். இத்தோடு வாதநோயினால் வாடுகின்ற தாயாருக்கும் உதவக் கலாவின் வருகை பயன்படும் என்று நம்பினாள் அவள். ஒரு சில நிமிட்டங்களில் எத்தனை எத்தனையோ எண்ணங்களை எண்ணிய மைதிலி, விரைவாக

மடலைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். அந்தக் கடிதம் அவளுக்கு ஆனந்தத்தைத் தந்தாலும் கடைசியிற் கலா எழுதிய சில வரிகள் மைதிலியின சிந்தனையைக் கிளறி விட்டன. அம மடலைப் பாருங்கள்.

பேராதனை.

கண்ணின் மணியாம் சோதரி,

உனக்குக் குழந்தை பிறந்ததை யறிந்தபோது அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். ஆனால், குழந்தை பிறந்த நேரத்தில் அத்தான் இல்லாதது உன்னைப் போலவே எனக்கும் கவலையைத் தருகின்றது மேலும், எம் தம்பி கட்டுப்பாடில்லாமல் சுற்றித் திரிவதாய் எழுதியிருந்தாய். முயன்றால் அவனைத் திருத்தலாம்.

மற்றும், அம்மாவுக்குச் சுகம் எப்படி? இங்கு சில நாட்களாய்க் கடும் மழை. அக்கா, நான் இந்த வாரம் யாழ்ப்பாணம் வரும்போது என்னுடன் எனது பிரிய ராஜனும் வருவார். எங்களை வரவேற்க எனது பெருமகள் கண்ணம்மா முன் வருவாளா?

உன் அன்பு,
கலா.

மடலைப் படித்த மைதிலி தன் தங்கை யாழ்ப்பாணம் வரும்போது ராஜனையும் கூட்டி வருவதையிட்டுச் சிந்தித்தாள். அவளின் மனம் என்னவோபோல் இருந்தது. மைதிலியைப் பொறுத்தவரை தன்னை அறியாமலேயே ராஜனை வெறுத்தாள். இந்த வெறுப்பு ராஜன் வரப் போவதாக அறிந்ததும் விஸ்வரூபம் எடுத்தது. ஆயினும், எவ்வளவோ கஷ்டப்பட்டு அந்த வெறுப்பை மனதுக்குள் அடக்கி வைக்க முயன்றாள். தங்கையின் மடலை வானொலி மேசையில் வைத்த அவள், வானொலிப் பெட்டியை மூடுக்கி விட்டாள். அவள் மூடுக்குவதற்கும் இலங்கை வானொலியில் அவசர அறிவிப்பு வெளியாவதற்கும் நேர வேறுபாடு இருக்கவில்லை. அந்த அறிவிப்பு அவளைக் கற்சிலை யாக்கி விட்டது.

வானொலி அறிவிப்பு

"இலங்கை, ஐ. நா. மன்றத்தின் வேண்டுகோளுக் கிணங்கக் கொங்கோப் போருக்கனுப்பிய இலங்கை இராணுவப் படையில் மேஜர் சில்வா உட்பட நானூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட வீரர்கள் போரிலே வீர மரண மடைந்ததை நேயர்கள் அறிவீர்கள். இப்பொழுது மேலும் மற்றொரு தளபதியாகிய சுந்தரத்தையும் இழந்து விட்டோம். கொங்கோ விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட இராணுவ விமானம் ஆபிரிக்காவின் இருண்ட காடுகளுக்கு மேலாகப் பறக்கும்போது திடீரெனத் தீப்பற்றியது. அதிலே சென்ற தளபதி சுந்தரமும் மற்றும் ஏழு இராணுவ அதிகாரிகளும் இறந்து விட்டார்கள். இதில் மூவர் அமெரிக்கர், மூவர் இந்தியர், ஒருவர் இலங்கையர். சுந்தரத்தின் மறைவை யொட்டி ஐ. நா. மன்றச் செயலாளர் அனுப்பிய அனுதாபச் செய்தி இலங்கையின் இராணுவ தலைமைப் பீடத்திற்குக் கிடைத்தது. சுந்தரத்தின் மறைவையிட்டுத் தனது ஆழ்ந்த அனுதாபத்தை அவரின் குடும்பத்தாருக்கு இலங்கை அரசாங்கம் தெரிவித்துக் கொள்கிறது."

வானொலிச் செய்தி மைதிலியின் நெஞ்சில் பேரிடியாய் இடித்தது. துயர மழை அவள் உள்ளத்திலே பொழிந்தது. பிரிவு மின்னல்கள் அங்கே மின்னின. வாழ்க்கையை இழந்துவிட்ட சூனிய உணர்வு மைதிலியைப் பிடித்துக்கொண்டது. அவளது பிரேமாலயம் இடிந்துவிட்டது. தாள முடியாத அதிர்ச்சியால் மைதிலி பதறினாள். தனது இல்லற விளக்கு அணைந்து விடுமென அவள் கனவுகூடக் காணவில்லை. தனது இன்பக் கோட்டைகள் யாவும் தகர்ந்து விட்டதாக அறிந்தாள் மைதிலி. யாரைத் தன் இதயத்தில் ஏற்றியிருந்தாளோ — யாரைத் தன் வாழ்வின் துணையென்று எண்ணியிருந்தாளோ — யாருக்காக வாழ்ந்திருந்தாளோ அந்தச் சுந்தரம் போய் விட்டார். அவளின் உலகமே இருண்டுவிட்டது.

ஆறுதல்

ஒரு வாரம் சொல்லாமலேயே பறந்துவிட்டது. சுந்தரத்தின் அகால மரணத்தைக் கேள்விப்பட்டு மூர்ச்சித்து விட்ட மைதிலி இன்றுதான் கண் விழித்தாள். அதுவும் எத்தனையோ டாக்டர்களின் பகீரதப் பிரயத்தனத்தின் பின்புதான் அவள் உணர்வு பெற்றாள். மெதுவாய்க் கண் விழித்துத் தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களைப் பார்த்தாள்.

பேராதனையிலிருந்து வீடு வந்திருந்த தங்கையின் முகம் அவளுக்குப் பழைய நினைவுகளை ஏற்படுத்தியது. "கலா, அவர் போய்விட்டாரடி!" மைதிலியால் பேச முடியவில்லை. துயரத்தின் காரணத்தால் அவளின் குரல் அத்தனை ஈனமாக இருந்தது. தன் தமக்கையை அணைத்த கலா பொல பொல எனக் கண்ணீர் சிந்தினாள். சோபை இழந்த முகத்துடனும், மெலிந்த தோற்றத்துடனும், ஆரூய்ப் பெருகிய கண்ணீருடனும் காட்சி தந்த மைதிலியைக் கலாவால் பார்க்கச் சகிக்கவில்லை துக்க மேலீட்டால் "அக்கா" என்று கூறியபடியே தன் தமக்கையின் கேசத்தைக் கோதிவிட்டாள் கலா. வெகு நேரத்திற்குப் பின்புதான் மைதிலிக்கு ஓரளவு அமைதி ஏற்பட்டது.

"அக்கா, இவர்தான் ராஜன்." கலா அறிமுகம் செய்த அவளின் காதலனை ஏறிட்டுப் பார்த்தாள் மைதிலி. ஒளி ததும்பும் விழிகள் — அலை அலையாய்ச் சுருண்ட கேசம் — களையான முகம், அந்த முகத்தில் விளைந்து நின்ற கம்பீரம். இவற்றோடு காட்சிதந்த ராஜனை உற்று நோக்கினாள் மைதிலி. அவள் ராஜனைப்பற்றி இதுவரையும் தப்பாகத்தான் அபிப்பிராயம் கொண்டிருந்தாள். ஆனால், பார்த்த முதற் பார்வையிலேயே ராஜன் யோக்கியமான குடும்பத்திலே பிறந்தவன் என்பதை அறிந்து கொண்டாள்.

அவளது மனம் அவனையும் மீறிக்கொண்டு "ராஜன் எல்லா விதத்திலும் கலாவுக்குப் பொருத்தமானவன்தான்" என்று கூறிக்கொண்டது. ஒரு விநாடியில் ராஜனை எடை போட்டுக்கொண்ட மைதிலி அவனை நோக்கி, "வணக்கம்" என்று கை கூப்பினாள். பணிவுடன் அவள் வணக்கத்தை ஏற்றுக்கொண்டான் ராஜன்.

பின்பு, மைதிலியும் கலாவும் ராஜனும் மனம் விட்டுப் பேசினார்கள். கணவனை இழந்த மைதிலிக்குத் தக்க ஆறுதல் மொழியைச் சொன்னான் ராஜன். சிலமணி நேரத்திலேயே ராஜன் மைதிலியின் இதயத்தை ஈர்த்துவிட்டான். அவனோடு பேசியதன் மூலமாக மைதிலியின் துன்ப நினைவுகள் ஓரளவுக்குக் குறைந்தன. என்றபோதிலும், மறைந்த தன் மணாளனின் மோகனரூபம் மட்டும் மைதிலியின் நெஞ்சில் பசுமையாகக் காட்சி தந்தது. கள்ளமில்லாத சிரிப்பால் இந்த உலகத்தையே ஆளலாம் என்பது முற்றிலும் உண்மையே! ராஜனின் கள்ளமில்லாத சிரிப்பும் கபடமற்ற உள்ளமுமே இதற்கு ஏற்றதொரு சான்று. எந்த மனிதர்களையும் தன்வசப்படுத்தும் சக்தி அவனது சிரிப்பிற்கு வாய்ந்திருந்தது. அவனது கள்ளமில்லாச் சிரிப்புத்தான் மைதிலியின் நெஞ்சிற்கு ஆறுதலாயும், கலாவிற்குக் கனவுலகில் மிதக்கச் செய்யும் சந்தோசமாகவும் இருந்தது.

இந்தச் சூழ்நிலையிலேயே பொழுதைக் கழித்தாள் தன் அன்புச் செல்வம் கண்ணம்மாவின் மழலை அமிழ்தமும் மைதிலிக்கு ஆத்ம திருப்தியளித்தது. மரத்தினின்று சருகுகள் உதிர்வதைப்போல முப்பது நாட்களும் கடந்து விட்டன. கலாவின் விடுமுறை முடிவடைகின்றது.

ராஜனும் கலாவும் அன்று பேராதனைக்குப் புறப்படுகிறார்கள். அவர்களைப் பிரிவது மைதிலிக்குச் சிரமமாக இருந்தது. நாம் ஒருவரிடம் மனம்விட்டுப் பழகிவிட்டால் அவரைப் பிரியும்போது வருகின்ற துன்பம் தவிர்க்க முடியாதது அல்லவா? அன்பின் இயல்பே அதுதானே!

யாழ்நகரைவிட்டுக் கொழும்புக்குப் புறப்படும் மெயில் வண்டி புறப்படுவதற்குத் தயாராக நின்றது. மெயில் வண்டியிற் பிரயாணம் செய்ய வந்தவர்களில் பெருந் தொகையானவர்கள், விடுமுறை முடிந்து பல்கலைக் கழகத்துக்குத் திரும்பும் மாணவர்களாகவே காணப்பட்டனர்.

ஜோடி சேர்ந்து தம் பிரயாணத்தைத் தொடங்கப் போகும் ராஜன் - கலா இருவரது நெஞ்சிலும் மைதிலியைப் பிரியப் போகிறோமே! என்ற துன்பம் எழவே செய்தது. கலாவோ எரிதழலில் விழுந்த மெழுகானாள். அவளுக்கு மைதிலியைப் பிரிவது பெரும் வேதனையாக இருந்தது. அதுவும் சென்ற விடுமுறைக்குத் தான் திரும்பும்போது மஞ்சளும் குங்குமமும் அணிந்து சுமங்கலியாகக் காட்சி தந்த மைதிலி இம்முறை மஞ்சள் இழந்து, குங்குமம் அழிந்து காட்சி தந்தது கலாவின் தாங்கமுடியாத துயரத்திற்கு ஆதாரமானது. "கலா, இந்த வருடத்தோடு உனது பீ. ஏ. படிப்புப் பூர்த்தியாகிறதல்லவா? கடைசி வருடம். நீ கவனமாகப் படிக்க வேண்டும்." ஆர்வத்தோடு தன் தங்கையிடம் சொன்னாள் மைதிலி.

கலா தமக்கையை அன்போடு நோக்கியபடி, "அக்கா! இந்தமுறை நானும் என்னவரும் முதல்தர சித்தி எய்துவோம்" என்றாள். கலாவின் குரலிலே நம்பிக்கை துளிர்த்தது. 'பாம்' எனப் பலமாகக் குரலெழுப்பிய டீசல் வண்டி பெரும் பூதம்போல் நிலையத்தைவிட்டுப் புறப்பட்டது. வேதனையோடு கையசைத்து விடைபகன்றாள் மைதிலி. அலைகடலிலிட ஆழமாக அன்புநீர் தேங்கிய அந்தப் பெண்ணுள்ளத்தைப்பற்றி மற்றவர்கள் தெரிந்திருக்க நியாயம் இல்லையல்லவா?

தம்பி

மனிதர்கள் இயற்கையில் எவ்வளவோ நல்லவர்கள். அவர்களைச் சூழ்நிலையும் சந்தர்ப்பமுமே தீயவர்களாக மாற்றுகிறது. இந்தத் தத்துவம் ரவியைப் பொறுத்த வரையில் அசைக்க முடியாத உண்மை. சிறு வயதிலேயே தந்தையை இழந்த அவன், மனம் போனபடி வாழத் தொடங்கினன். அவனது கம்பீரம் பலரை அவனுக்கு நண்பர்களாக்கியது. இந்த நிலையில் சந்தன ஓடையாக இருந்த அந்த உள்ளம் சாக்கடையாகியது. "பிஞ்சிலே பழுத்தவர்கள்" என்று சொல்லப்படும் வகையைச் சேர்ந்தவன் ரவி. அவனுக்குத் தன் தாயிடமோ, தமக்கைகளான மைதிலி, கலா ஆகியோரிடமோ இம்மியளவும் பயம் கிடையாது.

வாழ்க்கையைப் பெரியவர்கள் இரண்டு வகையாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒன்று 'இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்க்கை'. மற்றையது 'எப்படியும் வாழலாம் என்ற வாழ்க்கை'.

இதில் இரண்டாவது வகை வாழ்க்கையைத்தான் ரவி வாழ்ந்தான். ஆம்! அவன் தன் மனம்போல் வாழ்ந்தான். சிகரட் குடித்தல், மது அருந்துதல், மற்றைய தகாத செயல்கள் எல்லாம் அவனிடம் ஒருமித்து நின்றன. இந்த நிலையில் அவன் படிப்பைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? பெயருக்காக எஸ். எஸ். சி. வகுப்பில் ஓரு மாதம் இருந்தான். பின்பு அவன் மழைக்குக்கூடக் கல்லூரிப் பக்கம் ஒதுங்கவில்லை. இந்த முறை அவன் அக்கா கலா விடுமுறைக்கு வந்தபோது அவன் வீட்டில் இல்லை. தன் தோழர்களோடு வெளியூர் போயிருந்தான். இன்று தான் தன் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்திருந்தான். அவனுக்குச் சுற்றுப் பயணம் போகப் பணம் எப்படிக் கிடைத்தது என்று கேட்கின்றீர்களா? அது

தான் அக்காவின் மோதிரம் பத்திரமாக இருந்ததே! அந்த மோதிரம் மைதிலிக்குச் சுந்தரம் முதன் முதலாகக் கொடுத்த அன்புப் பரிசு. அதனைத் தன் தம்பி ரவி களவாடிச் சென்றதை மைதிலி அறிவாள்

அதனைப் பற்றித் தன் தங்கையிடமோ, ராஜனிடமோ, ஏன் நோயாளியாகிய தன் தாயிடமோகூட அவள் சொல்லவில்லை. காரணம், அவள் ரவிமேல் வைத்த பாசம். அவள்தான் ரவிமேற் பாசம் வைத்திருந்தாளே தவிர அவன் அவளை விரும்பினனே? அதுதான் இல்லை. அலைகடல் போல் அன்பு வைத்த சகோதரியை அறவே வெறுத்தான் அவன். அவனது உள்ளம் அந்த அளவிற்கு மரத்துப் போயிருந்தது. அந்தக் கல் நெஞ்சத்திற்கு மைதிலியின் அன்பை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்?

அலைபாயும் ரவியின் நெஞ்சம் கேவலமான பண்புகளை ஏற்றிருந்ததே தவிர அன்பை ஏற்கவில்லை காரணம், அவளைப் புரிந்துகொள்ள ரவியால் முடியாததேயாகும். தன் சகோதரன் தன்னை வெறுத்தபோதிலும்கூட மைதிலி அவனை விரும்பினாள். அன்பிற்கே உரிய பொறுமையும் சாந்தமும் அவளிடம் விஞ்சி நின்றன.

"அக்கா".

வெகுநாட்களுக்குப் பின் வீட்டிற்கு வந்த ரவியை ஏறிட்டு நோக்கினாள் மைதிலி "யார் தம்பியா? வா அப்பா வா. இவ்வளவு நாட்களுக்குப் பிறகாவது உனக்கு வீட்டு நினைவு வந்ததே". அக்காளின் உபசரிப்பு ரவிக்கு முக்கியமாய்ப் படவில்லை. "அக்கா, அதெல்லாம் இருக்கட்டும். இப்போது எனக்கு ஐம்பது ரூபாய் பணம் அவசரமாக வேண்டும்" என்றான் ரவி. "என்னப்பா ரவி விளையாடுகிறாயா? கூப்பன் பொருட்கள் எடுக்கவே பணம் இல்லாதிருக்கின்றதே! இந்த நிலையில் ஐம்பது ரூபாவிற்கு நான் எங்கு போவேன்?" அக்காவின் மேல் ரவிக்குக் கோபம்

கோபமாய் வந்தது. "எனக்கு வேண்டியது பணம்." ரவி அலட்சியமாய்க் கேட்டான். அவனின் அலட்சியப் பேச்சு மைதிலிக்கு என்றுமில்லாத கோபத்தை வரவழைத்தது.

"டேய் ரவி, வந்ததும் வராததுமாகப் பணத்தைக் கேட்டால் நான் என்ன செய்வேன்? பணம் இல்லை யென்று உனக்கு எத்தனை தடவை சொல்வது? உன் னால் நான் படும் கஷ்டங்கள் ஒன்று இரண்டா? பள்ளிக் கூடம் போகிறேன் என்று சொல்லிவிட்டுக் கண்டபடி ஊர் சுற்றுவதும், கண்டவர்களோடு சேர்வதும், சீ, சீ, ரவி! எங்கள் அம்மா படுத்த படுக்கையாய்க் கிடக்கின்றார். அவ ருக்கு வைத்தியம் பண்ணவே பணம் போதவில்லை. இந்த நேரத்தில் நீ பணம் கேட்டால் நான் என்ன செய் வது?" மைதிலி துன்பம் தாளமாட்டாமல் கண்ணீர் விட்டாள். அவளின் உருக்கமான பேச்சும், அவள் உகுத்த கண்ணீரும் ரவியின் கல் நெஞ்சைக் கரைக்கவில்லை. அவ னது பிடிவாதத்தைக் கண்டு பக்கத்திற் படுத்திருந்த நோயாளியான தாயாருக்கே பொறுக்கவில்லை.

"டேய் ரவி, அக்காவுக்கேன் வீண் கஷ்டத்தைக் கொடுக்கின்றாய்?"

தாயின் பேச்சு ரவியின் கோபத்தைக் கிளறிவிட்டது. "நீ வாயை மூடிக்கொண்டு சும்மா இரு." ரவி தாயின் மேல் எரிந்து விழுந்தான். அந்தத் தாயும் அவன் குணம் அறிந்து முணுமுணுப்புடன் முடங்கிவிட்டார். இவற்றை யெல்லாம் அசட்டை செய்த ரவி மேலும் தொடர்ந்தான். "அக்கா உன் முடிவென்ன? பணம் தருகிறாயா, இல் லையா? அன்பு, பாசம் அப்படி இப்படி என்று சொல்வ தில் ஒன்றும் இல்லை. அவற்றைச் செய்தல்லவா காட்ட வேண்டும். என்மேல் உனக்கு அன்பிருந்தால் என் தேவைக்கு நீ பணம் தராதிருப்பாயா?" தன் தம்பியின் கபடப் பேச்சு மைதிலியின் நெஞ்சை மேலும் உருக்கி விட்டது. "ரவி, இந்தா, இந்தா. வளையல் வைத்தாவது

பணத்தைப் பெற்றுக்கொள்." தன் கையிலுள்ள ஒரே தங்க வளையலையும் தம்பியிடம் கொடுத்தாள் மைதிலி. அதைப் பெற்ற ரவி வெற்றிச் சிரிப்போடு விரைந்து சென்றான். மைதிலிக்கோ தன் தம்பியை நினைக்கின்ற போது ஆத்திரத்தைவிட அனுதாபமே மேலெழும்பியது.

நாட்கள் நடந்தன. வரவர ரவியின் குணமோ மோச மாகிக்கொண்டே வந்தது. அவன் தீயவர்களோடு சேர்ந்து இயற்கைக்கு விரோதமான செயல்களில் ஈடுபடுவ தாக மைதிலியிடம் பலர் முறையிட்டார்கள். பதினெட்டு வயதாகியும் ரவியின் நடத்தை பொறுப்பற்றதாகவே யிருந்தது. சீரழிந்து கொண்டிருக்கும் தன் தம்பியைத் திருத்து வதற்கு மைதிலி எவ்வளவோ முயற்சியெடுத்தாள். அவ ளது முயற்சிகள் யாவும் விழலுக்கு இறைத்த நீராயின. "தன் மகன் இப்படிக் கெட்டழிகிறானே" என்ற ஏக்கம் தாயின் நோயையும் அதிகரித்தது.

சோதனை

அன்று சனிக்கிழமை. இரவு ஒன்பது மணியிருக்கும். வெளியே மழை கொட்டிக் கொண்டிருந்தது. இடியும் மின்னலும் மாறி மாறி விளையாடிக் கொண்டிருந்தன. மைதிலியின் தாயின் உடல்நிலை எதிர்பாராத விதமாக கவலைக் கிடமாகியது. திடீரென நேர்ந்த இந்த மாற்றத்தினால் மைதிலி துடித்தாள். அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை. இந்த அகால நேரத்திலே டாக்டரை நாடிப் போவதென்றால் அது அவளால் இயலாத காரியம். அத்தோடு வழக்கமாகத் தன் தாயாருக்கு வைத்தியம் பார்க்கும் டாக்டரும் இப்போது ஊரில் இல்லை. அப்படிக் கூட்டி வருவதாயிருந்தால் ஊர்க் கோடியில் அமைந்திருக்கும் டாக்டர் நந்தகோபாலனைத்தான் அழைத்து வரவேண்டும். இந்த இரவு நேரத்தில் அவ்வளவு தூரம் நடந்துபோய் டாக்டரைக் கூட்டி வருவது பெண்ணொருத்தியால் ஆகக் கூடிய காரியமா? வெளி முன்றலில் படுத்துக்கிடந்த தம்பி ரவியைக் கூப்பிட்டாள். பதிலில்லை. தட்டி யெழுப்பினாள். தமக்கையின் பகீரதப் பிரயத்தனத்தின் பின் டாக்டரைக் கூட்டிவரச் சென்றான் ரவி. மைதிலியின் நெஞ்சம் "பொறுப்புணர்ச்சி யற்ற தன் தம்பி டாக்டரைக் கூட்டி வருவானா? அப்படியானால் அவர் எப்போ வருவார்?" என்ற ஏக்கத்தில் மிதந்தது. நேரம் செல்லச் செல்லத் தாயின் நிலை மேலும் கெட்டுக்கொண்டே போனது. வெளியே பெய்த பேய்மழையும் பலத்த இடியும் பயங்கர மின்னலும் நடக்கப்போகும் பயங்கரத்தை அறிவித்துக் கொண்டிருந்தன. அருகே இருந்த குமரன் கோயில் மணி பன்னிரு முறை அடித்து ஓய்ந்தது.

மைதிலியின் நெஞ்சம் மட்டும் ஓயாமல் துடித்துக் கொண்டேயிருந்தது. அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அங்குமிங்கும் உலாவினாள். தன் குல தெய்வமான முருகனை அந்நேரத்தில் பிரார்த்தித்தாள்.

டாக்டரைக் கூட்டிவரச் சென்ற ரவி வழியில் தன் நண்பன் மணியைச் சந்தித்தான். மணியின் விருப்பின்பேரில் இரண்டாம் காட்சி படம் பார்க்கச் சென்றுவிட்டான் ரவி. படம் பார்த்துக் கொண்டிருந்த லயிப்பில் தன் தமக்கை, தாயின் நோய் அதிகரித்ததினால் டாக்டரைக் கூட்டிவரச் சொன்னதையும் மறந்து விட்டான்.

வீட்டில் மைதிலியோ புழுவெனத் துடித்தாள். மணி ஒன்றரையாகி விட்டது. இன்னமும் ரவி திரும்பவில்லை. இந்தக் காரணத்தை விளங்காத மைதிலி பொறுமையை இழந்தவளாய் டாக்டரின் வீட்டை நோக்கிக் கிளம்பினாள். அவள் கொண்டு செல்லக் குடையொன்றைக் கையில் எடுத்தாள். அக் குடையைச் சுந்தரம் பரிசாகக் கொடுத்திருந்தான். ஒரு கணம் மறைந்த தன் கணவனைச் சிந்தித்த மைதிலி பெருமூச்சு விட்டபடியே விரைந்தாள். அவளின் குழந்தை கண்ணம்மா தொட்டிலில் கண்ணயர்ந்திருந்தாள். தாயோ சாவோடு போராடிக் கொண்டிருந்தாள். இத்தகைய சூழ்நிலையில் கொட்டும் மழையை, கொடிய மின்னலை, பேரிடி முழக்கத்தை எல்லாம் பொருட்படுத்தாது டாக்டர் வீடு நோக்கி விரைகின்ற மைதிலி உண்மையிலேயே எத்துணை பெரியவள்?

நடுநிசி. ஊரே உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது. எதனையும் பொருட்படுத்தாது மைதிலி விரைந்து கொண்டிருந்தாள். மைதிலியின் செயல் கண்டு இடி சிரித்தது. மின்னலோ கண் சிமிட்டியது. கால் வயிற்றுச் சோற்றோடு தெருவோரக் கடை வாசல்களில் படுத்திருந்த நாய்கள் அவளைப் பார்த்துக் குரைத்தன. இவற்றையெல்லாம் மைதிலி சட்டை செய்யவில்லை. வரவர அவளின் வேகம் அதிகரித்துக் கொண்டிருந்தது. உயர்ந்த கட்டடம். அதன் முன்னே அழகான முல்லைக் கொடிகள். மாடியறையில் மட்டும் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதுதான் டாக்டர் நந்தகுமாரின் வீடு

மைதிலி வாசலை நாடுவதற்கும் டாக்டரின் வீட்டிலிருந்து ஒரு பெண் அவளைக் கடந்துகொண்டு போவதற்கும் சரியாக இருந்தது. அந்த மங்கை மைதிலியை அலட்சியமாகப் பார்த்தபடி வெளியே போனாள். "யாரிது? உம்..... யாராயிருந்தாலும் நமக்கென்ன?" தனக்குத் தானே சொல்லிக்கொண்ட மைதிலி அறிவிப்பு மணியை அடித்தாள். உள்ளேயிருந்து இரவு உடையுடன் வெளியே வந்த நந்தகுமாருக்கு வந்த விஷயத்தைச் சொன்னாள் மைதிலி. "அப்படியா? வந்து உள்ளேயிருங்கள்" என்று வரவேற்ற டாக்டர் வீட்டினுள்ளே சென்றார்.

அழகோவியமான மைதிலியைக் கண்டதிலிருந்து டாக்டரின் மனதில் ஏதேதோ சலனங்கள். அவரது நெஞ்சில் விபரீத எண்ணங்கள் படர்ந்தன. தனது மனைவி மஞ்சுளாவையும் மகளையும் அவர் கதிர்காமத்திற்கு அனுப்பி இருந்தார். இந்தத் தனிமையே அவரது நெஞ்சிலே ஆசையின் நாதத்தை மீட்டியது. சற்று நேரம் மனச்சாட்சியோடு போராடிய டாக்டர் மனச்சாட்சியைத் தூக்கி எறிந்தார். அவரது முகத்தில் விபரீத புன்னகை தவழ்ந்தது.

"ஐயோ....."

டாக்டர் வீட்டு மாடியிலிருந்து கிளம்பிய 'ஐயோ' என்ற அலறலைத் தொடர்ந்து 'உதவி, உதவி' என்ற குரல் கேட்டது. இதைக் கேட்ட மைதிலி திடுக்குற்றாள். மீண்டும் அந்த அவல ஓலி கேட்கவே பொறுமையிழந்த மைதிலி மேல்மாடியை நோக்கி ஓடினாள்.

அங்கே ஓர் அறை. அழகான படுக்கையறை. நீல நிற விளக்கொன்று மெல்லிய ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்தது. படுக்கையறையைச் சுற்றி அலங்கோலமான படங்கள் மாட்டப்பட்டிருந்தன. மைதிலி அந்தப் படுக்கையறையிலே நின்று ஏதும் அறியாது திகைத்துக் கொண்டிருக்கையில் படீரென அந்தப் படுக்கையறைக் கதவு சாத்

தப்பட்டது. திகைத்தவளாய்த் திரும்பிப் பார்த்த மைதிலி கற்சிலையானாள். அவளை நோக்கி மோக முறுவலுடன் டாக்டர் நந்தகுமார் நெருங்கிக் கொண்டிருந்தார். "வேண்டாம் டாக்டர் வேண்டாம்" என்ற மைதிலியின் அலறலைப் பொருட்படுத்தாத டாக்டர், "அழகுத் தெய்வமே, வா அப்படியே; என்னை அணைத்துக்கொள். கொஞ்ச நேரம், கொஞ்ச நேரந்தானே!" மைதிலியைப் படுக்கைமுன் தள்ளினார் டாக்டர். பின்பு தன் முகத்தை மைதிலியின் முகத்திற்கு அருகே கொண்டுபோனார். அப்பொழுது மைதிலி தன் சக்தி எல்லாவற்றையும் திரட்டி 'ஐயோ' என்று அலறினாள்.

இரண்டாம் காட்சிப் படம் பார்த்துவிட்டு நண்பன் மணியை அவன் வீட்டிலே சேர்த்த ரவி வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் மாடி வீடொன்றிலிருந்து கிளம்பிய 'ஐயோ!' என்ற குரல் ஆச்சரியத்தைக் கொடுத்தது. தெருவிலிருந்து அந்த வீட்டு வாசலை நாடிய ரவிக்கு மீண்டும் 'ஐயோ' என்ற குரல் கேட்டது. தெளிவாகக் கேட்ட அந்தக் குரல்? — அவனால் சிந்திக்க முடியவில்லை. விரைவாக மாடிப்படிகளைக் கடந்து சில வினாடிகளுக்குள் படுக்கையறையை அடைந்தான்.

ஆனால், உள்ளே பலத்த போராட்டம் நடந்துகொண்டிருந்தது. வேகமாகக் கதவைத் தள்ளிய ரவி, தன் அக்கா டாக்டருடன் போராடிக் கொண்டிருப்பதையும் கண்டான். ஒரே பாய்ச்சலில் டாக்டரை நாடிய ரவி, ஆவேசமாக அவர்மேற் பாய்ந்து மூர்க்கத்தனமாக உதைத்தான். 'தானடும் முன்னே தன் தசையாடும்' என்பார்களே, அந்த அசுரபாசம் இப்போதுதான் ரவியின் நெஞ்சில் நிரம்பியிருந்தது. ஆத்திரம் தீரும்மட்டும் டாக்டரை அடித்தான். பக்கத்திற் கிடந்த இரும்புச் சங்கிலியொன்றை யெடுத்து டாக்டரின் மண்டையைத் தாக்கினான். மறுகணம் டாக்டர் இரத்த வெள்ளத்தில் மிதந்தார். ரவியின் வாயோ, "காமக் குரங்கே! அக்காவிடமா வாலாட்டினாய்?" என்று கர்ஜித்தது. நாயைப்போல் படுத்துருண்ட டாக்டர், "ஐயோ! கொலை! கொலை!" என்று அலறினார்.

பொலிஸ் நிலையத்தில் தலையைக் கவிழ்த்துக்கொண்டு நின்றான் ரவி. அவன் அருகில் நின்றாள் அவள் தமக்கை. மைதிலியை விசாரித்த இன்ஸ்பெக்டர் அவளை வீடு போகுமாறு பணித்தார். மைதிலியோ நெஞ்சம் குமைந்தாள். தனக்காகக் கொலைகாரனாகிய தன் தம்பியை அவளாற் பார்க்க முடியவில்லை. அவனை விட்டுப் பிரியவும் முடியவில்லை. கண்களிலே கண்ணீர் மல்க வீடு திரும்பினாள் மைதிலி.

வீட்டை யடையும்போது பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. வீட்டினுள் அடியெடுத்து வைத்த மைதிலி 'அம்மா' என்று கத்தினாள். அங்கே அவளைப் பெற்ற அன்பு அன்னை இறந்து கிடந்தாள். "அம்மா! நீ போய்விட்டாயா?" என்றபடியே தாயின்மிசை விழுந்து மைதிலி அழுதாள். இரவெல்லாம் கொட்டிய மழைகூட மைதிலி வடித்த கண்ணீருடன் போட்டி போட முடியாமல் ஓய்ந்து விட்டது.

அம்மா

விசாலமான வகுப்பறை பீ. ஏ. கடைசி வருடம் மாணவ மாணவிகள் குழுமியிருந்தார்கள். பேராசிரியர் "தமிழ்த்திரு" அவர்கள் புறநானூற்றில் பிசிராந்தையாரின் அற்புதப் பாடல் ஒன்றுக்கு நயம் சொல்லிக் கொண்டிருந்தார். அந்தப் பாடம் முடிய, அகநானூற்றில் ஒரு பகுதிக்கு விளக்கம் நடந்தது. தலைவன் தலைவி உறவு பற்றி விளக்கம் நடந்தபோது கலாவின் கமல விழிகள் கள்ளத்தனமாக ராஜனை நாடின. ராஜனும் கலாவைப் பார்த்து மென்னகை புரிந்தான். இந்நேரம் வகுப்பறைக்குள் நுழைந்த சேவகன் ஒரு தந்தியைப் பேராசிரியரிடம் கொடுத்துவிட்டுச் சென்றான். "மிஸ் கலா, உங்களுக்குத் தந்தியொன்று வந்திருக்கிறது." பேராசிரியர் கொடுத்த தந்தியை வியப்போடு வாங்கிய கலா ஓதுக்குமுகமாகச் சென்று அதனைப் பிரித்தாள்.

"அம்மா இறந்துவிட்டார். உடனே வருக."

மைதிலி.

தந்தியைப் படித்த கலாவின் தலை சுற்றி வேதனை செய்தது. தேம்பித் தேம்பி அழுதாள். செய்தி கேட்ட ராஜன் அவளை எவ்வளவோ தேற்றினான்.

பேராசிரியர் தமிழ்த்திருவும் ஆறுதல்மொழி சொன்னார். கலா அதிபரின் அநுமதி பெற்று ஒரு கிழமை லீவு எடுத்து யாழ்ப்பாணம் புறப்பட்டாள். ராஜனும் யாழ்ப்பாணம் வருவதாகச் சொல்லவே கலா தடுத்துவிட்டாள். ஆனால், ராஜனே அவளை வழியனுப்பி வைத்தான்.

"கலா, அம்மாவைப் பார். எம்மைப் பெற்ற கண் கண்ட தெய்வத்தைப் பார்." கலாவால் துயரத்தைத் தாங்க முடியவில்லை. ஆகவேண்டிய காரியங்கள் ஓவ்

வொன்றும் நடந்தன. தாய்க்கு இறுதிக் கடனை ஆற்றுவ தற்காக ரவிக்குப் பொலிசார் ஒரு சிறுபொழுது விடுதலை கொடுத்திருந்தார்கள். தன் தாயின் மரணத்தில் தனது மூர்க்கத்தனத்திற்கும் பங்கிருக்கிறதென ரவி அறிவான். அந்த உண்மை அவனுக்குக் காலம் கடந்தே தெரிந்தது. தாயின் சிதைக்குத் தீ மூட்டித் திரும்பும்போது ரவி துய ரத்தின் எல்லைக் கோட்டுக்கே சென்றுவிட்டான். அன்ன மிட்ட அந்தக் கைகள் — சீராட்டித் தாலாட்டிய அந்தக் கைகள் — தீயரக்கனுக்கு உணவாகியது.

"அம்மா! போய்வா" என்று என்று ரவி கூறும்போது அவனிடம் உண்மையான உருக்கம் நிறைந்திருந்தது. தாய், தெய்வத்தின் பிரதிபிம்பம். அன்னையின் பெரு மையை ஆயிரம் ஆயிரம் காவியங்களாலும் போற்றிப் புகழ முடியாது. ரவி இப்போ பழைய ரவியல்ல. அவன் திருந்திவிட்டான். புது மனிதனாகிவிட்டான். என்றபோதி லும் சட்டத்தின் முன் அவன் கொலைகாரன். இதை நினைத்தபோது மைதிலிக்குப் பெருந் துன்பமாக இருந் தது. அவள் தனது கணவனின் பள்ளித் தோழனை முரளீதரனையே ரவிக்காக வாதாடும்படி ஏற்பாடு செய் திருந்தாள். பணம் கொடுத்தபோது அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

இது இப்படியிருக்க ஒரு வாரத் தவணை முடிந்து கலா பல்கலைக் கழகத்திற்குப் பயணமானாள். போகும் போது தான் போய்ச் சேர்ந்ததும் ராஜனை யாழ்ப்பாணம் அனுப்புவதாய்க் கூறி விடை பெற்றாள். மைதிலிக்கு ராஜன் வருவது சந்தோசமாகவே யிருந்தது அவன் வருவது தம்பியின் வழக்கு விஷயத்திற்கும் உதவியாய் இருக்கும் என்று அபிப்பிராயப்பட்டாள் மைதிலி.

விசாரணை

டாக்டர் நந்தகுமாரைக் கொலை செய்ததாக ரவிமேல் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. மைதிலியின் பேரிலும் விசா ரணை நடந்தது. ரவி டாக்டரைக் கொலை செய்த கொலை யாளியென்றும், ரவியின் கூற்றுப்படி டாக்டர் அவன் சகோதரியைக் கற்பழிக்க முயன்றதாகக் கூறப்படுவது ஏற் கக் கூடியதாக இல்லையென்றும், காரணம், டாக்டரின் நன்நடத்தையைப் பற்றி உலகமே அறியும் என்றும், ஆகவே, டாக்டரைக் கொலை செய்த ரவிக்கு மரண தண் டனைதான் கொடுக்க வேண்டுமென்றும், அதுவே எதிர் காலத்தில் அவனைப் போன்றவர்கள் தோன்றாது தடுப்ப தற்கு ஏற்ற வழியென்றும் முழங்கினார் அரசாங்கத் தரப்பு வழக்கறிஞர்.

ரவியின்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டு அவ னைத் தீயவனாக நீதிமன்றத்துக்குக் காட்டியது. ரவியைப் பொறுத்தவரையில் அவன் வாழ்வதற்கு விரும்பவில்லை. இறந்தால், தன் தாயை, அத்தான் சுந்தரத்தை, ஏன் சிறு வயதில் இறந்த தன் தந்தை ஆகியவர்களையெல்லாம் சந் திக்கலாம் என்ற நினைப்பு அவனுக்குச் சாவின்மேல் இனம் தெரியாத பற்றை ஏற்படுத்தியது.

ரவியின் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற் றுக் கொண்டிருந்தது. தன் தம்பியை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்த மைதிலிக்கு ராஜனின் ஆறுதல்மொழி சாந்தியைத் தருவதாக இருந்தது. நீதிமன்றத்துக்குப் போகும்போது ராஜனையும் கூட்டிக் கொண்டுதான் மைதிலி போவாள். அவர்கள் இருவரும் ஒன்றுகப் போவதைப் பார்த்து வம்பளப்பதற்கென்றே தெருவில் திரிகின்ற இரட் டைக் கால் நாய்கள் வசை பாடின. மைதிலி இதையிட்டு வேதனையுற்றாலும் எப்போதோ தன் கணவன் தனக்குச் சொல்லிய "நான் என்ன செய்கிறேன் என்பது எனக்கு முக்கியமே தவிர, மற்றவர் என்னைப் பற்றி என்ன நினைக்

கிறார்கள் என்பது அல்ல" என்ற ஞானி எமெர்சனின் வாக்கு அவள் ஞாபகத்திற்கு வந்தது.

அன்று தன் தம்பியின் வழக்கின் தீர்ப்பு நாள். "தீர்ப்பு என்னவோ?" என்று மனம் பதைத்துக் கொண்டிருந்தாள் மைதிலி. ராஜன் அவளைத் தேற்றிக்கொண்டிருந்தான்.

ரவியின் தரப்பில் வாதாடிய வழக்கறிஞர் முரளீதரன் மிகத் திறமையாக வாதாடினார். ரவி சிறுபிள்ளையென்றும் அவன் செய்தது கைமோசக் கொலையென்றும் அற்புதமாக வாதாடினார் முரளீ. இதன்பின் நடுவர்களின் அபிப்பிராயப்படி நீதிபதி தீர்ப்பை வாசிக்கத் தொடங்கினார். எல்லாருடைய காதுகளும் கூர்மையாகக் காணப்பட்டன. ராஜனும் மைதிலியும் மிக ஆர்வமாக இருந்தார்கள். ரவியோ மனம் சோர்ந்தவனுய்க் காணப்பட்டான். அவனுக்குத் தெரியும் தனக்கு மரண தண்டனைதான் கிடைக்குமென்று.

"சாம்பசிவத்தின் மகனை டாக்டர் நந்தகுமாரை, ரவி கொலை செய்தான் என்பதை ரவியே ஒப்புக்கொள்கிறான். ஆனால், நாம் டாக்டர் கொலைசெய்யப்பட்ட நோக்கத்தை அறியவேண்டும். நந்தகுமாரைத் தாய்க்கு நோய் மாற்றுச் செய்ய அழைத்துவரப் போயிருக்கிறாள் மைதிலி. அவரோ மைதிலியோடு சரசமாட முயன்றிருக்கிறார். அவர் அறையிலே உடைந்து கிடந்த கண்ணுடி வளையல்கள் இதை மெய்ப்பிக்கின்றன. சகோதரியின் அழுகைக் குரல் படம் பார்த்துவிட்டுத் தெருவில் வந்துகொண்டிருந்த எதிரியின் காதில் கேட்டிருக்கிறது ஓடிவந்து பார்த்த எதிரி தன் உற்ற சகோதரி டாக்டரின் ஆசைப் பிடியில் அகப்பட்டுத் திணறுவதைக் கண்டான். தன் சொந்தச் சகோதரியை வேற்றான் ஒருவன் கற்பழிக்க முயலும்போது யார்தான் பொறுமையாக இருக்க முடியும்? ஆத்திரம் முற்றி டாக்

டரை எதிரி கொலை செய்து விட்டான். இக்கொலை ஒரு கைமோசக் கொலை. ரவியினது சூழ்நிலையில் இப்படித் தான் நடந்திருக்கும். நடுவர்களின் தீர்ப்பும் என் கருத்தையும் ஒட்டி அமைந்திருப்பதனல் ரவிக்கு ஆறு வருடச் சிறைத் தண்டனை அளித்துத் தீர்ப்புக் கூறுகிறேன்."

நீதிபதியின் நீண்ட உரை முடிந்தது. 'தனக்கு மரண தண்டனைதான்' என்று மனம்விட்டுப் போயிருந்த ரவிக்கு நீதிபதியின் தீர்ப்பு மகிழ்வூட்டுவதாக இருந்தது. தான் அனுபவிக்கப்போகும் ஆறு வருடச் சிறை வாழ்க்கையும் தன்னை உயர்ந்த மனிதனுக்குமென்பதை ரவி உணர்ந்திருந்தான். ஆறு வருடங்கள் சகோதரியைப் பிரிந்திருக்க வேண்டும் என்ற ஏக்கத்தின் வயப்பட்ட ரவி தான் செய்த குற்றங்களை யெல்லாம் மன்னிக்கும்படி சகோதரியிடம் வேண்டிக்கொண்டு பொலிஸ் வண்டியில் ஏறினன். மைதிலி தன் தம்பிக்குத் துயரோடு விடைகொடுத் தனுப்பினள். துயருற்ற மைதிலியை ஆறுதற்படுத்திய ராஜன், "வழக்கு முடிந்து விட்டதால் நாளை பல்கலைக் கழகத்திற்குப் புறப்பட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டான்.

விடிவு

எங்கு பார்த்தாலும் பயங்கர மிருகங்கள் திரிகின்ற பெரிய காடு. கார்மேகத்தைவிட இருண்ட காடுகள். அங்கே சூரியன் உதிப்பதைக்கூடக் காணமுடியாது. அக் காடுகள் ஆபிரிக்காக் கண்டத்தைச் சேர்ந்தவை. 'இருண்ட கண்டம்' என்ற பெயர் ஆபிரிக்காவுக்கு எவ்வளவு பொருத்தம்! அத்தகைய ஆபிரிக்காவிலே — காங்கோப் பகுதியைச் சுற்றியிருத்த இருண்ட காட்டிலேதான் அந்த மனிதன் கடந்த ஆறு வருடங்களாய் வாழ்ந்து வருகிறான். தனது பாவனைக்காக ஒரு சில மரங்களைக் கொண்டு ஒரு சிறு குடிலைச் செய்திருந்தான் அவன். அதுவே அவனது வசிப்பிடம். கொடிய அக்காட்டுப் பகுதியும், பயங்கர மிருக இனங்களும் புதிய உலகமாகவே அவனுக்குக் காட்சி தந்தன. அவன் கண்ட பழங்களையெல்லாம் பறித்துண்டான். அழுக்குக் குட்டைகளிலிருந்து நீர் பருகினான். இந்த வாழ்வில்லா வாழ்வை அவன் வாழ்ந்து கொண்டிருந்தும்கூடத் தெய்வம் அவனைச் சாக விடவில்லை. விரும்பியிருந்தால் அந்தப் பயங்கர விபத்து நடந்த நேரத்திலேயே செத்திருக்க வேண்டும், ஆறு வருடங்களை அந்தக் காட்டுப்புறங்களிலேயே கழித்தான். கொடிய மிருகங்களைத் தவிர வேறு எதையுமே அவன் காணவில்லை?

இந்நிலையில் ஒருவித ஏகாந்தப் பித்து அவனைப் பிடித்துவிட்டது என்றே கூற வேண்டும். ஆறு வருடங்களாகப் புதிய இருண்ட உலகத்தில் வாழும் அந்த மனிதன் எங்கோ — எத்தனையோ மைல்களுக்கப்பால் வாழ்கின்ற ஒருத்தியை மட்டும் நெஞ்சிலே நினைத்திருந்தான். அவனது நெஞ்சிலே மேகப் பரப்பில் தோன்றுகின்ற மின்னலைப் போல அந்த ஒருத்தியின் நினைவும் தோன்றித் தோன்றி மறைந்தது.

வழக்கம்போல் அன்றும் பொழுது புலர்ந்தது. பொழுது புலர்ந்தது என்பதைப் புள்ளினங்கள் கிளப்பிய இன்னிசையிலிருந்து அம் மனிதன் அறிந்து கொண்டான். ஊரில் எங்கும் சேவல் கூவும், உதய சூரியனின் பொற்கதிர்கள் அழகுடன் மிளிரும். இதன் மூலம் பொழுது புலர்வதை அறியலாம். ஆனால், அந்த இருண்ட காட்டிலே சேவல் கூவுமா? சூரியன் உதிக்குமா? எத்தனை எத்தனையோ விதமான பறவைகளெல்லாம் 'கீச்', 'கீச்' எனக் கத்தின. புலிகள் உறுமித் திரிந்தன. இன்னும் எத்தனையோ மிருக வகைகள் வெளிக் கிளம்பின. நீடிய காலக் காட்டு வாழ்க்கையால் அந்தப் பயங்கர மிருகங்கள் கூட அவனுக்கு அச்சத்தைத் தரவில்லை!

இப்படியாக மலர்ந்த காலை நிகழ்ச்சிகளை வழக்கம் போல் இரசித்தான் அந்த மனிதன். அப்பொழுது எதிர்பாராதவிதமாக 'டுமீல்' என்ற துப்பாக்கிச் சத்தம் மிக அருகில் கேட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்ட காட்டு மனிதனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. கொடிய மிருகங்களின் கூக்குரல்களைக் கேட்டு ஆறு வருடங்களாக அவற்றிலேயே ஊறித் திளைத்திருந்த அந்த மனிதன் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டு மிக மகிழ்ந்தான். "யாரோ மனிதர்கள் உலாவுகிறார்கள்" என்ற சொல் அவனது வாயிலிருந்து வெளிக் கிளம்பியது. அவனது சிந்தனை இப்படி ஓடிக் கொண்டிருக்கும்போது அவனுக்குச் சமீபத்தில் மனிதர்கள் சிலபேர் ஆங்கிலத்தில் பேசி வருவது கேட்டது. பயங்கரத் தாடியுடனும் மாற்றமிக்க தோற்றத்துடனும் காட்சியளித்த அந்த மனிதனுக்கெதிராகத் துப்பாக்கியை நீட்டினார்கள் வந்தவர்கள். "நீ யார்?" எனக் கேட்டார்கள் பல வருடங்களுக்குப் பிறகு மனிதர்களை, மனிதக் குரல்களைக் கேட்டு நெஞ்சம் களித்த அந்த மனிதன் தன் வரலாற்றைக் கூறினான். அவனின் வரலாற்றைக் கேட்ட வேட்டைக்கார ஆங்கிலேயருக்கு அதிசயமும் இரக்கமும் அவன்பால் ஏற்பட்டன. நல்ல மனம் படைத்த அந்த ஆங்கிலேயர்கள் அவனையும் தங்களுடன் அழைத்

துக் கொண்டு தாங்கள் அடித்திருந்த தற்காலிகக் கூடாரத்தை நோக்கிப் போனர்கள்.

காட்டு மனிதன் புதுப்புது எண்ணங்கள் தன் இதயத்தை மேவ அவர்களைத் தொடர்ந்தான். இருண்டு கிடந்த தன் வாழ்க்கைப் பொழுது விடியப்போகிறது என்ற எண்ணம் அந்த மனிதனது உள்ளத்திலே சுந்தரக் கனவுகளைத் தோற்றின.

"இந்தாருங்கள், சாப்பிடுங்கள்." எழிலே உருவான ஏந்திழை ஒருத்தி கைகளிலே உணவுத் தட்டை ஏந்திய படி நின்றுள். நீல விழிகள் — சிவந்த மேனி — முத்துப் பற்கள் — பட்டுக் கன்னங்கள் இவற்றுடன் காட்சியளித்த அந்த அழகோவியத்தைப் பார்த்து அசந்தே போனன் சுந்தரம். அவனது கண்கள் அந்த ஆங்கிலக் கிளியை உற்று நோக்கின. மீண்டும் அவள், "இந்தாருங்கள், சாப்பிடுங்கள்" என்ற போதுதான் சுய நினைவுற்றன் சுந்தரம். உணவை வாங்கி ஆர்வமாய் உண்டான். அவன் உண்ணும் அழகையே பார்த்துக் கொண்டிருந்தாள் மேரி — அந்த ஆங்கில மங்கை. சுந்தரம் உணவை முடிப்பதற்கும் கூடாரத்திற்குள் இரு ஆங்கிலேயர் நுழைவதற்கும் சரியாயிருந்தது.

வந்த ஆங்கிலேயர்களில் வயது மூத்தவர் மேரி பக்கம் திரும்பித் தன் கைகளிலே கொண்டுவந்த மானின் மாமிசத்தை வாட்டச் சொல்லிக் கொடுத்தார். பின், சுந்தரத்தின் பக்கம் திரும்பிய அவர், "மிஸ்டர் சுந்தரம், நாம் இந்த வாரக் கடைசியில் இங்கிலாந்து திரும்புகிறோம்" என்றார். அவர் சொல்லியது சுந்தரத்திற்குப் பரம சந்தோஷமாக இருந்தது. அப்படியானல் விரைவில் இலங்கைக்குப் போக என்னல் முடியும். இலங்கை என்றவுடன் மோகனமான நினைவுகள் அவனது நெஞ்சிலே விண்மீன்களைப்போல் படர்ந்தன. மைதிலி இப்போது தாயாகி

யிருப்பாள் என்றெண்ணும்போது சுந்தரம் பரவசக் கடலில் ஆழ்ந்தான். ஆனல், மைதிலியும் — அரசாங்கமும், ஏன் உலகமுமே தான இறந்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்குமென்பதை நினைத்தபோது சுந்தரத்திற்குத் தன் மேலேயே ஆச்சரியமாக இருந்தது.

ஒரு வாரம் பறந்தது. ஜேம்ஸ்சும் ரெபேட்டும் மேரியும் சுந்தரமும் இங்கிலாந்து மீண்டார்கள். இங்கிலாந்தில் மேலும் ஒரு வாரத்தைக் கழித்தான் சுந்தரம். அன்று திங்கட்கிழமை. பிரமாண்டமான லண்டன் விமான நிலையத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிய ஜேம்ஸ், மேரி, ரெபேட் ஆகியவர்களிடமிருந்து கண்ணீர் மல்க விடை பெற்றன் சுந்தரம். "உங்களை நான் என்றுமே மறக்க மாட்டேன். என் வாழ்க்கையிற் புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தவர் தாங்கள்" என்றன் சுந்தரம்.

அன்பு எத்தனை மகத்தானது! இனம், மொழி போன்ற கட்டுக்களை யெல்லாம் உடைத்து எறிந்துகொண்டு ஓற்றுமை கீதத்தை முழங்குகின்ற அன்பில்லாவிட்டால் மனித வாழ்வில் என்னதான் அர்த்தம் இருக்கிறது? மூவரிடமும் விடைபெற்ற சுந்தரம் விமானத்தில் ஏறினன். இருக்கையில் அமர்ந்த அவனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. ஆம்! அங்கேயிருந்தது அவனது மாமன் மகள் நிலாவழகிதான். அவளை ஆச்சரியத்தோடு பார்த்தான் சுந்தரம். அவளோ சுந்தரத்தைப் பேராச்சரியத்துடன் பார்த்தாள். ஜெட் விமானம் இலங்கை நோக்கிப் புறப்பட்டது.

புயல் ஒய்ந்தது

கழிந்த ஆறு வருடங்களிலும் மைதிலியின் வாழ்விலும் பல மாறுதல்கள் நடந்திருந்தன. அவளின் அன்புச் செல்வம் கண்ணம்மாவிற்கு ஆறு வயது முழுமை பெற்றிருந்தது. மைதிலியின் தங்கை கலாவுக்கும் ஐந்து வயதுக் குழந்தையிருந்தது. அந்தக் குழந்தைக்குச் சுந்தரத்தின் பேரையே வைத்திருந்தார்கள்.

கலாவும் ராஜனும் வாழ்ந்த வாழ்க்கையைக் கண்டால் ஆசையை வென்ற ஞானியே காதல் வாழ்வை ஏற்றிட முனைந்திடுவான். அந்த அளவிற்கு ஆனந்தமயமான வாழ்க்கை வாழ்ந்தார்கள் அவர்கள். கலா வீணையாக இருந்தாள். சுந்தரம் தந்தியாக இருந்தான். அவர்கள் இருவரும் இணைந்து பிரேமையின் அமுத நாதத்தை மீட்டினார்கள். ஆண்டவன் அவர்களுக்கு எந்தக் குறையுமே வைக்கவில்லை. பீ. ஏ. சித்தியெய்தியவுடனேயே ராஜனுக்கும் கலாவுக்கும் கல்லூரி ஒன்றில் ஆசிரிய நியமனங் கிடைத்தது. இருவரும் ஜோடியாகக் கல்லூரிக்குப் போவார்கள். ஜோடியாக வருவார்கள். அவர்கள் வாழ்ந்த ஆனந்தமயமான வாழ்வை இரசிப்பதிலும், தன் செல்வமான கண்ணம்மாவுடனும் சுந்தரத்துடனும் கொஞ்சி விளையாடுவதன் மூலமாகவும் தன் குறையெல்லாம் மறந்தாள் மைதிலி. அன்று மைதிலி அளவுக்கு மீறிய ஆனந்தப்பட்டாள். காரணம், அன்றுதான் அவள் தம்பி ரவிக்குச் சிறைத் தண்டனை முடிந்து விடுதலை கிடைக்கின்றது. அவனை அழைத்து வருவதற்காக ராஜன் முதல் நாளே கொழும்புக்குப் புறப்பட்டுவிட்டான். இன்று பகல் யாழ்ப்பாணம் வரும் யாழ்தேவியில் ரவியும் ராஜனும் வர வேண்டும். அதைத்தான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் மைதிலியும் கலாவும்.

'பாம்' என்ற ஒலியுடன் வீட்டு முற்றத்தில் வந்து நின்ற காரிலிருந்து இறங்கிய மனிதனைக் கண்டவுடன் 'என் தெய்வமே!' என்று கூச்சலிட்டாள் மைதிலி. அவள் கண்களை அவளால் நம்பவே முடியவில்லை. அவள் சிந்தையனு ஒவ்வொன்றும் மகிழ்ந்தது. "அத்தான்! நீங்களா?" மைதிலி அதிசயித்தாள். காரிலிருந்து இறங்கி அருகே வந்த சுந்தரம் தன் மனைவியை அன்புடன் அணைத்துக் கொண்டான். தானும் தன் நாடும் ஏன் உலகமுமே இறந்துவிட்டதாய்க் கூறப்பட்டுவந்த தன் இதய தெய்வம் நேரில் வந்தது மைதிலிக்கு அளவற்ற ஆனந்தத்தைத் தந்தது.

மைதிலி தன் அன்பனின் ஸ்பரிசத்திலே மெய்ம் மறந்தாள். பக்கத்திலே தன் தங்கை இருப்பதையும் மறந்து சுந்தரத்தை அணைத்தாள் மைதிலி. கலாவோ ஆனந்தக் கண்ணீர் மல்க ஆறு வருடங்களுக்குப் பின் சேர்ந்த அந்த ஜோடியை மனதுக்குள் வாழ்த்தினாள்.

"மைதிலி, மைதிலி," சுந்தரம் வார்த்தை பேச முடியாதவனுய்த் தன் மனைவியை அணைத்திருந்தான். உண்மையில் பிரிவு சக்தி மிக்கதுதான்! ஆறு வருடங்கள் எங்கெங்கோ வாழ்ந்து கொண்டிருந்த அந்தச் ஜோடிப் பறவைகள் பிரேமை வானத்திற் சிறகடித்தன. சுந்தரம் தன் அன்புக் குழந்தை கண்ணம்மாவைக் கொஞ்சினான். அக்குழந்தை ஆறு வருடங்கள் பார்த்தறியாத அப்பாவை ஆச்சரியத்தோடு பார்த்தது.

தன் தாயிறந்தது — ரவி சிறை செல்ல நேரிட்டது — கலா மணமுடித்தது — எல்லா விஷயங்களையும் சுந்தரத்திற்குச் சொன்னாள் மைதிலி. ஆறு வருடங்களும் தமக்குள் ஏற்படுத்தியிருந்த மாற்றங்களை நினைக்குந்தோறும் சுந்தரத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் தான் சென்ற யுத்த விமானம் விபத்துக்குள்ளானது தொடக்கம் விமானத்திலிருந்து திரும்பும்போது இங்கிலாந்திற் கல்வி பயின்று திரும்பிய நிலாவழகியைச் சந்தித்தது வரை சகல விஷயங்களையும் சொன்னான்.

006664.

அவன் தன் மாமனுர் இறந்ததைச் சொல்லியபோது சுந்தரத்தின் குரல் தளர்ந்தது. இந்த நேரத்திலே ரவியும் ராஜனும் வந்து சேர்ந்தார்கள். ஆறு வருடங்களின் பின் தன் தம்பி வீட்டுக்கு வந்ததையிட்டு மைதிலி மனச் சந்தோஷம் அடைந்தாள். சுமார் ஏழு வருடங்களுக்குப் பின் அத்தானைக் கண்ட மகிழ்ச்சியில் ரவியும் இதயம் பூரித்தான்.

மைதிலியின் வாழ்வில் ஏற்பட்ட துயரின் இருள் நீங்கி இன்ப ஒளி பிறந்தது.

"மைதிலி இதோ இந்த மடலை....." சுந்தரம் பேச்சை முடிக்கவில்லை. அதற்குள் அவனைக் கடிந்த மைதிலி, "இதோ நம் பாரதியின் அமுதக் கவிதை" என்று சொல்லிக் சொல்லிக் கொண்டே வானொலிப் பெட்டியின் ஒலியைப் பலமாக்கினுள். பாரதியின் சுவர்க்க கீதத்தைச் சுந்தரம் மைதிலி மட்டுமல்ல, பக்கத்தறையிற் படுத்திருந்த ராஜன் கலா ஜோடியும் உற்றுக் கேட்டார்கள்.

"சுட்டும் விழிச் சுடர்தான் — கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி — கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ
பட்டுநீலக் கரும்பு டைவை
பதித்த நல் வயிரம்
நட்டநடு நிசியிற் தெரியும்
நட்சத்திரங் களடி
சோலை மலரொளியோ — உனது
சுந்தரப் புன்னகைதான்
நீலக் கடலலையே — உனது
நெஞ்சின் அலைகளடி
கோலக் குயிலோசை — உனது
குரல் இனிமையடி
வாலைக் குமரியடி — கண்ணம்மா
மருவக் காதல் கொண்டேன்."

ஆகா! எத்தனை அற்புதமான கவிதை! காலத்தின் வேகத்தை யறியாத — ஜீவ கவிதையின் வடிவிலக்கணத்தை யறியாத மூடர் நீங்கலாக மற்றவர்கள் யாவரும் பாடலை இரசிப்பார்கள்.

மைதிலி தன்னையும் மறந்து "வாழ்க பாரதி" என்று கத்தினுள். அப்படியே அவள் சுந்தரத்தின் மார்பிற் சாய்ந்தாள். பக்கத்தறையிலும் இந்த நாடகமே நடந்தது. ஒரு சில நிமிடங்கள் பாரதி பாட்டுக் கேட்ட பரவசத்தில் சுந்தரத்திற்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. தன் கையிற் கொண்டு வந்த மடலை மைதிலியிடம் கொடுத்தான். அம் மடலில் சுந்தரத்தை மீண்டும் மேஜர் வேலைக்கு வரும்படி அரசாங்கம் தயவாகப் பணித்திருந்தது. அதைப் படித்தபோது மைதிலியின் மனம் சற்றுக் கோணியது. அது கண்டு சிரித்த சுந்தரம், "மைதிலி, உன்னை நான் இனிப் பிரியமாட்டேன். நான் வேலைக்குப் போகும்போது நீயும் என்னுடன் வருவாய்" என்றான். அப்பொழுது அங்கு வந்த ரவி தந்தியொன்றைச் சுந்தரத்தின் கையிற் கொடுத்தான். அதனைப் பிரித்த சுந்தரத்தின் முகத்திற் பரவசம் காணப்பட்டது.

"நான் நாளை வருகிறேன்"

"நிலாவழகி"

தந்தியை மைதிலியிடம் கொடுத்த சுந்தரம் ரவியை அர்த்தபுஷ்டியோடு பார்த்து, "ரவி, என் மாமன் மகள் இனி உனக்குரியவள்" என்றான். ரவியோ பணிவோடு தலை கவிழ்ந்தான். ரவி — நிலாவழகி திருமணத்திற்கு இசைவு கூறிப் பக்கத்து வீதியிலுள்ள முருகன் கோயில் மணி ஒலித்தது.

முற்றும்.

006064.

13.7.83 B283
22.10.84 B280.

ஆசிரியரின் நூல்கள்

வெளிவந்தவை

1.	''விஜயேந்திரன் கவிதைகள்''	1-00
2.	அவள் (நாவல்)	1-25

வெளிவர இருப்பவை

3.	பாரதிக்குப் பின்	(விமர்சனம்)
4.	தெய்வ மானிடன்	(நாடகம்)
5.	''அழகே என்னை அழிக்காதே''	(கவிதை)
6.	கனவு பலிக்குமா?	(நாவல்)
7.	உள்ளம்	(நாவல்)
8.	பாரதியின் காதற்பித்து	(கட்டுரை)
9.	பொது மதம்	(கட்டுரை)
10.	''ஆசுகவி'' வேலுப்பிள்ளை	(கட்டுரை)
11.	மின்னல்	(சிறுகதைகள்)
12.	அழகின் அணைப்பில்	(சிறுகதைகள்)
13.	என்றும் நல்லவன்	(நாவல்)
14.	ஜீவஜோதி	(நாடகம்)
15.	ஈழத்திலக்கியம்	(விமர்சனம்)

வெளியீடு:

விஜயா பிரசுரம்

மல்லாகம்

00604

அடுத்த வெளியீடு

பாரதிக்குப் பின்.....

(கவிதா விமர்சனம்)

இந்நூல், பாரதி யுகத்தின் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களை காய்தல் உவத்தலற்ற முறையில் எடுத்துக் காட்டுகின்றது. தமிழகத்திலும், ஈழத்திலும் மலர்ந்த கவிதா மலர்கள், நேர்த்தியாகத் தொடுக்கப்பட்டு நூலெங்கும் குன்றாத சுகந்தத்தை வீசுகின்றது.

எழுதியவர்:

கவிஞர் விஜயேந்திரன்

வெளியீடு:

விஜயா பிரசுரம்

மல்லாகம்